12
Dec 1935

RG73 ,N28
N35·8·12.
187113

1371 No. M. 2330. "SIDDHANTHAM"
Vol. 8—No. 12.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 DEC 1935

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | யுவ ஆண்டு மார்கழித் திங்கள்<br>1935ஆம் டிசம்பர்மீ | இதழ் ௧௨ |
|---|---|---|

உள்ளுறை பக்கம்

சைவப்புலவர் தேர்வு 1935 (சைவ இலக்கியங்கள்) ... ௪௫௫
சைவப்புலவர் தேர்வு 1935 (சைவசித்தாந்த சாத்திரங்கள் ... ... ௪௬௬
இளஞ்சைவப்புலவர் தேர்வு 1935 (இலக்கியப்பகுதி) ... ௪௭௧
" (சாத்திரப்பகுதி) ... ௪௭௫
வாசீசமுனிவர் அருளிய ஞானாமிர்த மூலமும் விளக்க உரையும் ... ௪௭௯
திருவேங்கடம் அல்லது திருப்பதி ... ௪௮௭
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தினகியமம் ... ௪௯௦
முக்கிய அறிக்கை ... ... ௪௯௨
நமது பூர்வ ஆலயங்கள் ... ... ௪௯௫
சித்தாந்த சாத்திரம் ... ... ௪௧௭ - ௪௪௮

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A. (Hons.)

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

# சமாஜத்தின் சைவத் தேர்வுகள்

சமாஜத்தின் சைவத் தேர்வுகள் 1935௵ நவம்பர்௴ 17௳ ஞாயிற்றுக்கிழமையன்று, திருப்பாதிரிப்புலியூர், திருப்பாண்டிக்கொடுமுடி, திருமயிலாப்பூர், தஞ்சாவூர் ஆகிய நான்கு இடங்களில் நடைபெற்றன. அவைகளைச் செம்மையாக நடத்தி உபகரித்த ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகட்கும், திருவாளர்கள் பெ. கோவிந்த மூப்பனார், ச. சிவகுமாரப் பிள்ளை, டி. பி. கே. அழகர்சாமிப் பிள்ளை முதலியவர்கட்கும் சமாஜத்தின் நன்றி பெரிதும் உரித்து. இத்தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் எண்மராவர். அவர்களுள் ஒருவர் சைவப் புலவர் பட்டத்துக்கும், எழுவர் இளஞ் சைவப் புலவர் பட்டத்துக்கும் விண்ணப்பித்தனர். இவ்வெழுவருள் இருவர் தேர்வுக்கு வரவில்லை. தேர்வுக்கு வந்த ஐவருள் நால்வர் தேர்ச்சி பெற்றனர். அவர்களுள் திரு. அ. முத்துக்குமாரஸ்வாமி என்பவர் இரண்டாம் வகுப்பிலும், திருவாளர்கள் சொ. அ. மணிவாசகன், கு. சுப்பிரமணியன், க பா. வேல்முருகன் என்பவர்கள் மூன்றாம் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றார்கள். இந்நால்வருக்கும் இளஞ் சைவப் புலவர்பட்டம் சமாஜ விழாவில் திருவண்ணாமலையில் 30-12 1935 அன்று பிற்பகலில் வழங்கப்படும்.

திரு. அ. முத்துக்குமாரஸ்வாமிக்கு முதற் பரிசும், திரு. சொ. அ. மணிவாசகத்துக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்படும். சைவப் புலவர் பட்டத்துக்கு விண்ணப்பித்தவர் தேர்ச்சி பெறவில்லை. அடுத்த ஆண்டில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் இத்தேர்வுகளிற் கலந்து கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

## சந்தா அறிக்கை

1936௵ ஜனவரி௴ 5௳க்குள் தங்கள் சந்தாவை மணியார்டர் செய்க. இல்லாவிடில் தங்கட்கு அடுத்த இதழ் வி. பி. மூலம் வரும். அதனால் வி.பி. செலவு அணா மூன்று தங்கட்கு அநாவசியமான செலவாகும். திருப்புகழ் வெளியீட்டை வாங்க விரும்புவோர் சந்தாவோடு ரூ. 3-12-0 சேர்த்து ரூ. 5-12-0 மணியார்டர் செய்தால் திருப்புகழ் நூல் ஒன்று ரிஜிஸ்தர் பார்சல் மூலம் அனுப்பப்படும். ஒரே மணியார்டரில் சந்தாவையும் திருப்புகழ் விலை, தபாற் கூலிகளையும் அனுப்புவதால் அன்பர்கட்கு ஒரு மணியார்டர் கமிஷன் செலவு மீதமாகும். பத்திரிகையை நிறுத்திவிட எண்ணுவோர் தயை கூர்ந்து உடனே எழுதுக.

## தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 52-ம் ஆண்டு விழா

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச் சபையின் 52-ம் ஆண்டு நிறைவுவிழா மிகச் சிறப்பாகத் தூத்துக்குடியில் 28, 29-12-35ல் சைவத்திருவாளர் - T. சிவராமசேஷப் பிள்ளையவர்கள், M. A., B. L., F. C. S., (Dy. Accountant-General, Bombay) தலைமையில் நடைபெறும். பல பேரறிஞர்கள் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

# முப்பதாவது ஆண்டு நிறைவிழா

# சைவர் மகாநாடு, திருவண்ணாமலை

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே. —அப்பர்

பேரன்புடையீர்,

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவிழாவும் சைவர் மகாநாடும் **திருவண்ணாமலையில் உயர்திரு - சுவாமி விபுலாநந்தரவர்கள்** தலைமையில், நிகழும் யுவ௵ மார்கழி௴ ௧௪௳ (29-12-1935) ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்றுநாட்கள் அடியிற் காணும்முறைப்படி நடைபெறும். இவ்விழாவின் சார்பான சைவ மங்கையர் மகாநாடு, **பண்டிதை - உயர்திரு அசலாம்பிகை அம்மையாரவர்கள்** தலைமையிலும், சைவ இளைஞர் மகாநாடு சைவத்திருவாளர் - **ஜி. கல்யாணம்பிள்ளை** பி. ஏ. டிப். எக். அவர்கள் தலைமையிலும் நடைபெறும். இவ்விழாவைத் திறந்துவைக்க, சைவத் திருவாளர் - **திவான் பகதூர் ஸ்ரீ தெய்வசிகாமணி முதலியாரவர்கள்** (Joint Registrar of Co-operative Societies, Madras) அன்புடன் இசைந்துள்ளார்கள். தாங்கள் தங்கள் சபையினரோடும், வாழ்க்கைத்துணை மக்கள் முதலிய உறவினரோடும் ஏனைய அன்பர்களோடும் வந்திருந்து நிறைவிழா முதலியவற்றைச் சிறப்பாக நடத்திவைக்கும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள

**ச. சச்சிதானந்தன்,**
**அ. சோமசுந்தரன்**
சமாஜ உதவித்தலைவர்கள்.

**ம. பாலசுப்பிரமணியன்,**
சமாஜப் பொதுக்காரியதரிசி.

# நிகழ்ச்சி முறை

## யுவ௵ மார்கழி௴ ௧௪௳ (29-12-1935) ஞாயிற்றுக்கிழமை

காலை 8 —11 திருக்கோயில் வழிபாடு. அருணைத் திருக்கோபுர முருகவேள் திருமுன்பு சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக அருணகிரிநாதர் அருளிய நூல்களை வெளியிடல்.

மாலை 2 — 2-30 கடவுள் வணக்கம், தலைவர் வரவேற்பு, திறப்பு விண்ணப்பம்.

2-30— 3-15 திறப்பாளர் பேருரை, திறப்பு.

3-15— 3-30 ஆண்டு அறிக்கை படித்தல்.

3-30— 4-15 தலைவர் பேருரை.

4-15— 5 உயர்திரு. சிதம்பர சுவாமிகள், தலைவர், அறுபத்து மூவர் மடம், திருவையாறு
‘ தலைமை ’

5 — 5-45 திரு. பி. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ. தமிழ்ப் புலவர், சென்னை கிறிஸ்தவர் கல்லூரி
‘ தித்திக்கும் மணிவார்த்தை ’

5-45— 6-30 சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார், ஸ்தாநீகர், கபாலீச்சரம், திருமயிலாப்பூர்
‘ பௌஷ்கர விருத்தியிற் சில அரும் பொருள்கள் ’

6-30— 7-15 திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி. ஏ. எல். டி சென்னை நகராண்மைக் கழகக்கல்வித் தலைவர்
‘ கந்த புராணம் நம் சொந்த புராணம் ’

7-15— 8 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

---

## யுவ௵ மார்கழி௴ ௧௫௳ (30-12-1935) திங்கட்கிழமை

காலை 7 —9-30 சைவ இளைஞர் மகாநாடு.

9-30—12 சைவ மங்கையர் மகாநாடு.

மாலை 2 — 2-30 கடவுள் வணக்கம், தலைவர் முன்னுரை.

2-30— 3-15 திரு. துடிசைக்கிழார் அ. சிதம்பரனார், திருவாரூர் வட்டத்துப் பாடிகாவற்றலைவர்
‘ அடங்கன் முறை ’

3-15— 4 திரு. தியாகராச ஞானியார், ‘சுதேசமித்திரன்’ புத்தகசாலை யதிபர், திருவாரூர்
‘ சமயத் தொண்டு ’

4 — 4-15 திரு. தியாகராச ஞானியார், அடுத்த ஆண்டில் மகா நாட்டைத் திருவாரூரில் நடத்தும்படி விண்ணப்பித்தல்.

4-15— 5 திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ., உருக்குமிணி சமையற் பாத்திரத் தொழிற்சாலை யதிபர் ‘துரிசுகட்குடனின்ற தூய்மை’

5 — 5-45 திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் புலவர்
‘ பண்டைத் தமிழரும் முருகவேள் வழிபாடும் ’

5-45— 6-30 திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ‘நவசக்தி’ ஆசிரியர் ‘புனருத்தாரணம்’

6-30— 8 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

யுவ௵ மார்கழி௴ ௧௬௳ (31-12-1935) செவ்வாய்க்கிழமை

காலை 7-30— 8 கடவுள் வணக்கம், தலைவர் முன்னுரை.

8 — 8-45 திரு. கே. வஜ்ரவேல் முதலியார், பி. ஏ., எல். டி. பச்சையப்பன் கலாசாலை யாசிரியர், காஞ்சிபுரம் ‘திருக்குறளும் சிவநெறியும்’

8-45— 9-30 திரு. ஔவை - சு. துரைசாமிப் பிள்ளை, தமிழாசிரியர் நாட்டாண்மைக் கழகக்கலாசாலை, திருவோத்தூர் ‘திருமுருகாற்றுப்படை’

9-30—10-15 திரு. காவித்தண்டலம் வேதாசல முதலியார், சைவபுராணிகர், காவித்தண்டலம் ‘மனத்தின் மாண்பு’

10-15—11 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

---

மாலை 2 — 2-30 கடவுள் வணக்கம், தலைவர் முன்னுரை.

2-30— 3 சமாஜக் காரியக் கூட்டம், தீர்மானங்கள், சமாஜ உத்தியோகஸ்தர்கள் தேர்தல்.

3 — 3-45 திரு. சி. கே. சுப்பிரமணியமுதலியார், பி. ஏ. வழக்கறிஞர், கோயன்புத்தூர் ‘திருவண்ணாமலை’

3-45— 4-30 திரு. வித்வான் - தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல். ‘கந்தரந்தாதி’

4-30— 5-15 திரு. எஸ். எஸ். பாரதியார், எம். ஏ., பி. எல். தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ‘பெரிய பொருள்கள்பற்றிச் சில சிறியஆராய்ச்சிகள்’

5-15— 5-30 வந்தனை கூறல்.

5-30— 6-30 தலைவர் முடிபுரை, கடவுள் வாழ்த்து.

---

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மகாநாட்டுக்கு விஜயம் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம். சில சொற்பொழிவாளர்களிடமிருந்து பதில்வரக் காலந்தாழ்த்தலால் அவர்கள் சொற்பொழிவுகளும் நிகழ்தல் கூடும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத்தின்
மாதத்தமிழ்ப் பத்திரிகை

மலர் எட்டு

**1935**

பத்திராசிரியர்

ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், சென்னை.

உதவிப்பத்திராசிரியர்

அ. சிதம்பரநாத செட்டியார், பி. ஏ. (ஆனர்ஸ்)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
திருவருளகம், 22-ஏ, கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர், சென்னை.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

உ

சிவமயம்

# உள்ளுறை


அப்பர் தேவாரம் அரும்பொருளகராதி—பத்திராசிரியர் ... ௨௪௪
,, சரித்திரமுறைப் பதிக அட்டவணை ,, ... ௨௨௫
அன்பர் பிரிவு ... ௧௦௫
ஆரூரர் அன்பு—பெ. கோவிந்த மூப்பனார் ௪௨௩, ௪௫௪
ஆலமுண்ட நீலகண்டன்—எஸ். இராமலிங்கம் ... ௧௪௭
இடையாறிடைமருதே—தி. கி. நாராயணசாமி ... ௨௦௪
இளஞ்சைவப்புலவர் தேர்வு 1935ஆ விஞக்கள் ... ௪௭௧
கல்லாடத்திலுள்ள திருவிளையாடற் பகுதிகள் ௩௮௫, ௪௩௩
கழுக்கையர் என்பதன் பொருள்—தி. கி. நாராயணசாமி ௯௭௫
கள்வீரே உமகாதலே—ம. வி. இராகவையங்கார் ... ௨௧௩
,, அ. சோமசுந்தரம் செட்டியார் ... ௨௧௨
,, மா. வே. நெல்லையப்ப பிள்ளை ... ௨௦௯
,, பத்திராசிரியர் ... ௧௧௩
சமாஜ 29-ம் ஆண்டு அறிக்கை ... ௫௪
,, திறைவிழா—G. கல்யாணம் ... ௯௧
,, விழாக்கணக்கு—தி. கி. நாராயணசாமி ௧௫௦
,, வரவேற்புத் தலைவர் (படத்துடன்) ... ௧௫௧
,, விசேஷ மகாநாடு—பத்திராசிரியர் ... ௩௩௭
,, விழாவில் நிறைவேறிய தீர்மானங்கள் ... ௧௦௮
சாத்தனார் கோயில்கள்—வை. சுந்தரேச வாண்டையார்... ௩௧௫
சைவ இளைஞர் சமயத்தொண்டு ... ௩௭௩
சைவ இளைஞர் பிரிவு ... ௯௪௩
சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமையுரை—கீ. இராமலிங்கம் ... ௪௯, ௮௫
சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 30-ம் ஆண்டு உத்தியோகஸ்தர்கள் ... ௧௦௬
சைவப் புலவர் தேர்வு 1935ஆ விஞக்கள் ... ௪௯௫
சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமையுரை—டி. என். தாணு அம்மாள் ... ௩௩, ௭௭
சைவமும் தமிழிலக்கியமும்—வை. சுந்தரேச வாண்டையார் ௨௩௮, ௨௪௧
சைவர்கட்குத் திருமுகம்—மா. வே. நெல்லையப்ப பிள்ளை ௧௩௧
சைவர் மகாநாட்டுத் தலைமையுரை—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ... ௧, ௯௫
ஞானமிர்த மூலமும் விளக்கவுரையும்—ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை ௩௧௯, ௩௫௧, ௪௦௧, ௪௭௫

தடுத்தாட்கொண்ட புராணம்—திக்கம். செல்லையா பிள்ளை ௪௨௪
தமிழர் மத வளர்ச்சி—அ. மு. பரமசிவானந்தம் ... ௪௧௭
தாயுமானவர் தத்துவ விளக்கம்—அ. வரதநஞ்சையபிள்ளை ௪௧௧, ௪௪௪
திருக்குறள் விளக்க ஆசிரியர்—பத்திராசிரியர் ... ௩௨௭
திருநீற்றின் சிறப்பு—S. A. அமிர்தகடேஸ்வரம் பிள்ளை ௩௪௮, ௩௭௮, ௪௫௨
திருப்புறம்பியத்துக் கல்வெட்டுச் செய்திகள்—வை. சுந்தரேச வாண்டையார் ... ௧௩௯
திருமங்கையாழ்வார்—ஜெ. ரவூல்ஹிலேர் ... ௩௭௬
திருவண்ணாமலையில் அடுத்த ஆண்டுவிழா—பத்திராசிரியர் ௧௧0
திருவள்ளுவர்—மறைமலையடிகள் ... ௩௯௯
,, திருநாட்கழக அறிக்கை ... ௨0௯
திருவிழாவில் சமய போதனை ... ௧௪௬
திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம் ... ௩௪௪
திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டார் சந்நிதிப் படம் ... ௧௫௨
திருவெம்பாவை வகுப்பு—காரியதரிசி ... ௧௧0
திருவேங்கடம் அல்லது திருப்பதி—பொன். சாமிநாத தேசிகர் ... ௪௮௭
துகளறுபோதக் கட்டளை ... ௧௯௧
தூத்துக்குடி தலைமைப் பேருரை—சி. எம். இராமச்சந்திர செட்டியார் ...௧௫௩, ௧௮௧
நமது பூர்வ ஆலயங்கள்—K. S. ஸ்ரீகாந்தன் ... ௪௯௯
நல்வரவேற்பு—புழலை. திருநாவுக்கரசு முதலியார் ... ௧0௪
நன்றியறி வாழ்த்து—இளஞ்சைவப் புலவர் . சுப்பிரமணிய உடையார் ... ௧௧௧
நாம் யார்—சிவதொண்டன் ... ௩௩௪
பாடுவித்த நாயகன்—உதவிப் பத்திராசிரியர் ௨௯௬, ௩௨௫
மதமாற்றம்—சைவத் தொண்டன் ... ௨௨௧
மற்றுஈண்டு வாராநெறி—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் ௧௧௮
முதல்வனது அறக்கருணையும் மறக்கருணையும்—அ. முத்தையா முதலியார் ௩௯௪, ௩௮௧
மூவர் பாடிய பதிகத்தொகை ... ௪௪௯
மெய்ப்பொருள்நாயனார் நாடகம்—அ. மு. பரமசிவானந்தம் ௩0௫
வாழ்த்துப்பா—பி. கு. இராமலிங்க செட்டியார் ... ௧௧௨
விசாகம் எப்பொழுது?—முத்துசுவாமி குருக்கள் ... ௨௨௪
விட்டிலும் நானும்—கீ. இராமலிங்க முதலியார் ... ௩௭௨
விநாயகமூர்த்த தத்துவார்த்தம்—கண்டாச்சிபுரம் - இராமலிங்க முதலியார் ... ௩௩0
ஸ்ரீலஸ்ரீ [illegible]காவலரவர்கள் தினநியமம் ... ௪௯0



Registered No. M. 2330.


# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "


| மலர் ௮ | யுவ ஆண்டு மார்கழித் திங்கள் 1935ஆம் டிசம்பர்மீ | இதழ் ௧௨ |
|---|---|---|


## சைவப்புலவர் தேர்வு - 1935*

### சைவ இலக்கியங்கள்

காலம்—3-மணி] [மார்க்கு—100

I (a) வான மிதுவெல்லா முடையான் றன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் றன்னைக் [மேல்
கடைக்கண்ணால் மங்கையுமை நோக்கா வென்
ஊனமது வெல்லா மொழித்தான் றன்னை
யுணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடற் றிருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.

இச்செய்யுள் அருண்முறைத் திரட்டில் எப்பகுதி யைச் சார்ந்தது?

*இவ்வாண்டில் 17-11-1935-ல் நடைபெற்ற தேர்வில் வழங்கப் பட்ட வினாத்தாள்கள் நான்கும் அனைவருக்கும் பயன்படுமென ஈண்டு வெளியிடப்படுகின்றன.

(b) இத்திரட்டிற் காணப்படும் பகுப்புமுறை நூற்பொருளோடு பொருந்தச் செவ்விதாக அமைந்ததாகுமா வென்பதனை ஆராய்க.

II (a) வைதெழுதார் காமம்பொய் போகாவடி
வஞ்ச வலைப்பா டொன்றில்லா வடி
கைதொழுது நாமேத்திக் காணும் மடி
கணக்கு வழக்கைக் கடந்த வடி—

இச்செய்யுட்பகுதியில் வற்புறுத்தப்படும் பெருண்மைகளைத் தெரிவிக்க.

(b) . . . உய்ந்த மூவரி
லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை—

இதன்கட் கூறுஞ் சரித்திரம் யாது?

(c) 'சாத்திரப் பேய்கள்' என்றது யாவரை? யாது காரணம் பற்றி இவ்வாறு இழித்துரைக்கப் படுகின்றனர்?

III (a) திருவிளையாடற் புராணச் சரிதங்களுள்ளே திருவாசகத்திற் கூறப்பெறும் மூன்று சரிதங்களை வரைக. (மாணிக்கவாசக சுவாமிகளது வரலாற்றோடு இயைத்துக் கூறப்படாதனவா யிருத்தல் வேண்டும்).

(b) சிவபெருமானை 'மேகம்' என்று உருவகித்துக் கூறுவதனை விரித்தெழுதுக. (செய்யுட்பகுதியைப் பெயர்த்தெழுதுதல் கூடாது; நமது சொந்த வாக்கியங்களாலே எழுதுதல்வேண்டும்)

(c) ஆகமமாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க, நாற்றத்தினேரியாய், சேவேடாகிக் கேளிறது



படுத்து, மாவேட்டாகிய வாகமம் வாங்கியும்,
அணுத்தருந் தன்மையிலையோன் காண்க.
இவற்றின் பொருளை விளக்குக.

IV (a) நாவுக்கரசு சுவாமிகள் தமது பதிகங்களொவ்வொன்றன்கண்ணும் இராவணனுக்குச் சிவபிரான் அருள் புரிந்ததைக் கூறும் குறிப்பு யாது?

(b) 'சுண்ணவெண் சந்தனச்சாந்து' என்னுந் திருப்பதிகத்தை ஓதியருளிய சந்தர்ப்பம் யாது?

(c) 'குணபரவீச்சர மெடுத்தான்'
இதனான் உணரப்படுஞ் சரிதக்குறிப்பினை வரைக.

V (a) சம்பந்தரும் நாவுக்கரசரும் திருத்தோணிபுரத்து இறைவரை வணங்கச் சென்ற காலத்து எவ்வாறு உவமிக்கப்படுகின்றனர்?

(b) இவ்வுவமானங்களி லிருந்து ஒவ்வொருவருக்குமுரிய தனிச்சிறப்புக்களுள் எவ்வெவை புலனாகின்றன?

(c) பழையாறைப்பதியில் நேர்ந்த நிகழ்ச்சியைப் புலப்படுத்துக.

VI (a) பரிமேலழகரது உரையின் சிறப்பினை இரண்டு உதாரணங்களால் தெளிவுறுத்துக.

(b) கள்ளாமை யென்பது 'பிறருடைமையாயிருப்பதியாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை' என விரித்துணர்த்தப் படுகின்றது. இங்ஙனம் 'கருதாமை' எனக் கூறுதற்குரிய நியாயங்களை ஆராய்க.

VII (a) ஒப்புரவறிதல் என்பதன் பொருளை விளக்குக.

(b) எதனை யொத்த 'விழுச்செல்வம்' இவ்வுலகின்கண் இல்லையென்று வள்ளுவர் கூறுகின்றார்? யாது காரணம்?

(c) சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு.

இத்திருக்குறளை நன்குவிளக்கி யுரையெழுதுக.

(d) அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

இதற்குப் பரிமேலழகர் கூறும் பொருள் யாது? பிறர் எங்ஙனம் பொருள் கொண்டுள்ளார்?

VIII (a) அதாதா, தேசிகன், புத்திரன்.
இவர்களது இயல்புகள் யாவை?

(b) நித்தியாங்கம், சாம்பவிதீக்ஷை, அநுகற்பம், உபகற்பம்.
இவற்றை நன்கு விளக்குக.

(c) உருத்திராட்சம் என்னும் பெயர்க்காரணத்தைத் தெளிவிக்க.

(d) யாவரிடும் அன்னத்தைப் புசிக்கலாகாது?

IX (a) விடலிபதி, காமமலடி, கன்னிகாமலடி, வழிமலடி, அசிதி இவற்றின் பொருள்களை விளக்குக.

(b) இலிங்கவகைகளையும் அவற்றின் நிலைகளையும் உணர்த்துக.

# சைவப் புலவர் தேர்வு - 1935

## சைவ சித்தாந்த சாத்திரங்கள்

காலம்—3-மணி] [மார்க்கு—100

I (a) பின் வருவனவற்றிற்குக் குறிப்பு எழுதுக:
1. கருடசானம். 2. சுட்டுணர்வு. 3. காட்டாக்கி. சிவமென்னு மந்தர. 5. சற்காரிய வாதம்.

(b) பின் வருவனவற்றிற்கு உரை தருக:

1. அதுவிது வென்ற தனுவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்-பொதுவதனில்
அத்துவித மாதல்....

2. ஒன்றனையா மூலத் துயிரனையும் நாபியினிற்
சென்றனையுஞ் சித்த மிதயத்தின்—மன்றவே
யையைந்தா நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

II (a) அரக்கொடு சேர்த்தி யனைத்தவக் கற்போல்

(b) கடற்றிரையே போன்று

(c) காந்தங் கண்ட பசாசத்து

(d) இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபால்
நல்லா யுளவாமால்—இவ் வுவமானங்கட்கு உவமேயங் காட்டித் தெளிவுறுத்துக.

III (a) சிவஞானபோதத்து ஆறுஞ் சூத்திரத்தினை வரைக.

(b) அஃது எவ்வியலைச் சார்ந்தது? யாது காரணம் பற்றி?

(c) அச்சூத்திரப் பொருளைப் பகுத்துணர்த்தும் அதிகரணங்கள் யாவை ?

IV (a) சித்தியாரைக் கேட்டற்குரியோர் எத்திறத்தினர் ?

(b) (i) கருதலளவை
(ii) பிரமேயம்
—இவை யொவ்வொன்றும் எத்தனை வகைப்படும்? விவரித் தெழுதுக.

(c) மூன்றுவகை யேதுக்களையும் உதாரணங் காட்டி விளக்குக.

V (a) உலகிற்கு முதற்காரணமாகத் தார்க்கிகர் எதனைக் கொள்வர் ?

(b) அவர் கூறுவனவற்றை மறுத்து அருணந்தி சிவாசாரியர் எவ்வாறு சித்தாந்தக் கொள்கையை நிறுவுகின்றார் ?

VI (a) இறைவனது உபசாரத் திருமேனிகளெனக் கூறப்படுபவை யாவை ? அவை யெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது யாது ?

(b) 'செயல்களே பலத்தைச் செய்யுந் தெய்வம் வேண்டா விங்கு' என்ற மதம் யாவர்க்கு உடம்பாடு ? அஃது எங்ஙனம் பூர்வபட்சஞ் செய்யப்படுகின்றது ?

(c) பிரேரக காண்டம், போகசயித்திரு காண்டம், போக்கிய காண்டம்—இவற்றை விளக்குக.

VII (a) உயிரிலக்கணம்பற்றிய கொள்கைகள் பலவற்றுள் மூன்றனை யெடுத்துக் கூறி, அவற்றுக்கு மறுப்பும் வரைக.

(b) சைவசித்தாந்தம் கூறும் உயிரிலக்கணம் யாது ?



VIII (a) சித்தாந்த மரபு கண்டன கண்டனத்தின் வரலாற்றினைத் தெரிவிக்க.

(b) 'சீடனுக்கு ஆசாரியர் வருமுன் மலநீங்கும்; பின் ஆசிரியர் வந்து பதார்த்த தரிசனம் பண்ணுவிப்பர்; படலம் நீங்கின கண்ணுக்கு ஆதித்தன் காட்டுமாறுபோல.'—இவ்வாக்கியங்களின் கண்டனமும் கண்டன கண்டனமும் யாவை ?

(c) 'வைரக்குப்பாயம்' என்றது எதனை ?

IX (a) 'சத்தசத் தறிவ தான்மா': இத் திருவிருத்தத்திற்குச் சிவசமவாத வுரையிற் கூறப்படும் உரை யாது ? அவ்வுரைக்கு ஆசிரியர் சிவஞான முனிவர் கூறும் மறுப்பு யாது ?

(b) சாத்திரங்கள் எத்தனை வகைப்படும் ? விவரித் தெழுதுக.

# இளஞ்சைவப் புலவர் தேர்வு—1935

காலம்—2½-மணி] **இலக்கியப்பகுதி** [மார்க்கு—100

**குறிப்பு:**—விடைகள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவான கையெழுத்திலும் இருத்தல் வேண்டும்

I ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையும் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்.
—இப்பாடலுக்குப் பொழிப்புரை எழுதுக.

II (a) கள்ளரோ புகுந்தீரென்னக்
கலந்துதான் னோக்கி நக்கு
வெள்ளரோ மென்று நின்றார்
விளங்கிளம் பிறையனாரே —இதற்குப் பொழிப்புரை வரைந்து இதிலிருக்கும் செய்யுள் நயத்தை விளக்குக.

(b) எம்மிறை நல்வீணை வாசிக்குமே. எப்போது? எதற்காக?

(c) முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே. முன்னிற்பது யாது? கடைதல் எப்படி? ஏன் கடையவேண்டும்?

III கதிர்க்கொள் பசியை யொத்தே நான்கண் டேனும் மைக் காணேதேன் எதிர்த்து நீந்தமாட்டேனுன். இதிலுள்ள உவமையைத் தெளிவாக விளக்குக.

IV (a) என் வாழ் முதலாகிய பொருளே. இது யாது? வாழ் முதலாதல் எப்படி?

(b) திருமாலாம் அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும். இவர்கள் விருப்பமும் ஆசையும் எதை நாடின? அவ்வாறு நாடுவதேன்?

(c) பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால், அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால், தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால், எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு.—இதிலுள்ள உவமைகளைத் தெளிவாக விளக்குக.

V (a) வறுமைப் பதம்புக உன்னினார் தில்லைமன்னினார். இளையான்குடி மாறர் விஷயத்தில் இவ்வாறு உன்னிய காரணம் யாது?



(b) புள்ளுறங்கும் வயல், பாசப்பழி முதல் பறிப்பார் போல. இவற்றின் உட்கருத்தை விளக்குக.

VI (a) எறிபத்த நாயனார் சரித்திரத்தைச் சுருக்கமாக எழுதுக.

(b) சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தில் பரவையார் திருமணமுதல் சங்கிலியார் திருமணம் முடியும் வரையுள்ள பகுதியைச் சுருக்கமாக எழுதுக.

VII (a) எண்குணத்தான் தாளைவணங்காத்தலை — எண் குணங்கள் யாவை?

(b) அனைத்தறன் யாது? அது அனைத்தறன் ஆவதெப்படி?

(c) அன்பின் வழியதுயிர்நிலை—இதைத் தெளிவாக விளக்குக.

VIII (a) முற்று மொலியின் முதிர்ந்த பலமந்த வொலி மற்றை மனமேலாம் வரம்—இதற்குப் பொழிப்புரை வரைக.

(b) எல்லா வினைக்குமினிது சுழுனை—இதன் கருத்தென்ன?

# இளஞ்சைவப் புலவர் தேர்வு—1935

காலம்—2½-மணி] சாத்திரப்பகுதி [மார்க்கு—100

I (a) எங்குமெவையு மெரியுறு நீர்போலேகந் தங்குமவன்றானே தனி—இதன் பொழிப்புரைக்க.

(b) ஊமன் கண்போல வொளியுமிகவிருளே—இதன் கண்ணுள்ள உவமையை விளக்குக.

(c) பாலாழி மீனுளும் பான்மைத்து எது? அஃது அவ்வாறுதல் ஏன்?

II தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக் கூடலை நீயேகமெனக் கொள்—இதன் பொருளைத் தெளிவாக (ஒரு பக்கத்துக்கு மேற்படாத அளவில்) எழுதுக.

III ஐந்தெழுத்தின் கூறுகள் கூத்தப்பெருமான் திருவுருவத்தில் அமைந்துள்ள வகையை மனவாசகங்கடந்தார் எவ்வாறு விளக்குகிறார்.

IV ஆதவன்றன் சந்நிதியி லம்புலியினூர் சோதி, பேதமற நிற்கின்ற பெற்றி. இது எதற்குவமையாயிற்று? உவமையின் நுட்பத்தைத் தெளிவாக விளக்குக.

V (a) பொற்பணிபோல பேதப்பிறப்பிலதாயிருள் வெளிபோற்பேதமுஞ் சொற்பொருள் போற் பேதாபேதமுமின்றி—இதன் பொருளைத் தெளிவாகக் கூறுக.

(b) 'அரிவையரின்புறு முத்தி' என்ற பாடலில் உமாபதிசிவாசாரியார் கூறும் முத்திவகைகளையும் அவை முத்தியல்ல வென்பதையும் உண்மை முத்தி யாதென்பதையும் சுருக்கமாக வரைக.

VI அழிந்திடும் பாசமென்னில் நித்தமென்றுரைத்தல் வேண்டா, அழிந்திடா தென்னில் ஞானமடைவது கருதவேண்டா. இதற்குச் சமாதானங் கூறுவதெப்படி?

VII அத்துவிதம் என்ற சொல் சிவஞானபாடிய சாரம் என்ற அதிகாரத்தில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

VIII சிவஞானபோத மூன்றாம் சூத்திரத்தை யெழுதி அதிலுள்ள அதிகரணங்களை விளக்குக.

வாகீச முனிவர் அருளிய

# ஞானாமிர்த

# மூலமும் விளக்க வுரையும்

[திரு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவோத்தூர்]

## ஆசிரியர் துதி

### அகவல் 4

அருளு மறிவு மிருடீர் பொறையும்
வாய்மையுந் தவமுந் தான மாட்சியு
மன்னுயிர்க் கின்பந் தன்மீக் கூர்தலு
மொழுக்கமும் விழுப்பமு மழுக்கா றின்மையுங்
கண்கான் முதலிய பொறியும் பண்பார்
பூணுந் துகிலும் பாண்விரி பிணையலும்
புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
தோற்றத் தன்ன வாற்றலெங் குரிசில்
குணப்பொற் குன்றம் வணக்க வாரா
வைம்புல வேழத்தின் வெந்தொழி லவியக்*
கருணை வீணை காமுறத் தழீஇச்
சாந்தக் கூர்முள் ளேந்தின னறீஇத்
தன்வழிக் கொண்ட சைவசி காமணி;
பரமா னந்தத் திருமா முனிவன்
வளமலி சேவடி வழுத்தி
யுளமலி யுவகை யுற்றனம் பெரிதே.

இஃது எங்குரிசிலாகிய ஆசிரியன் குணக்குன்றமும், சைவ சிகாமணியும் மாமுனிவனுமாவன்; அவன் சேவடி வழுத்தி உள்ளம் உவகை மலிதலால் ஊக்கம் பெருகுதலால் இந்நூல் இனிது முடியும் என்கின்றது.

*வீய என்பது அச்சுப்பிரதியிற் காணும் பாடம்.

இதன்கண், "அருளு மறிவும்" (1) என்பதுமுதல், "ஆற்றலெங் குரிசில்" (8) என்பதுவரை ஒரு தொடர். "குணப்பொற் குன்றம்" (9) என்பதுமுதல் "திருமாமுனிவன்" (14) என்பதுவரை ஒரு தொடர். "வளமலி சேவடி" (15) என்பதுமுதல், "உற்றனம் பெரிதே" (16) என்பதுவரை ஒரு தொடர்.

அருளும் அறிவும் இருள்தீர் பொறையும்
வாய்மையும் தவமும் தான மாட்சியும்
மன்னுயிர்க்(கு) இன்பம் தன்மீக் கூர்தலும்
ஒழுக்கமும் விழுப்பமும் அழுக்கா(று) இன்மையும்
கண்கால் முதலிய பொறியும் பண்(பு)ஆர்
பூணும் துகிலும் பாண்விரி பிணையலும்
புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
தோற்றத் தன்ன ஆற்றல்எம் குரிசில்.

இஃது எங்கள் குருபரன் புண்ணியமூர்த்தி என்கின்றது.

உரை முடிபு :—அருள் முதலாகப் பிணையல் ஈறாகக் கூறிய யாவும் படைத்து, மண்மிசை வந்த புண்ணியத்தின் தோற்றத்தைப்போல ஆற்றலையுடைய எங்கள் குருபரன் என்பது.

உரை :—அருளும், அறிவும், அறியாமை தீர்தற் கேதுவாகிய பொறுமையும், வாய்மையும், தவமும், தானத்தாற் பெறும் மாண்பும், மன்னுயிர்க்குத் தன்னினும் இன்பம் மிக உண்டாகுக என நினையும் திருவுள்ளமும், ஒழுக்கமும், அதனாலுண்டாகும் உயர்வும், பிறராக்கங் கண்டு பொறாது ஒழுகும் தீயொழுக்கமின்மையும், கண் முதலிய அறிவுப் பொறியும், கால் முதலிய கன்மப் பொறியும், நற்பண்பு பொருந்திய பூணும், உடையும், வண்டு பாடும் மாலையும் கொண்டு, புண்ணியமானது மண்மேல் உருக்கொண்டு வந்தாற் போன்ற தோற்றத்தையுடைய ஆற்றல் மிக்கோன் எங்கள் ஆசிரியனாகிய குருபரன். எ - று.



பொருட்டுணிபு நன்கு விளங்குதற்கு ஆற்றல் எம் குரிசில் என்பதனை ஆற்றலையுடையோன் குரிசில்என இயைத்துக் கூறப்பட்டது. அருளாவது ஒரு காரணமுமின்றி உயிர்கண்மேலுண்டாகும் நேயம். "தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா வுயிர்கண்மேலும் செல்வதாகிய கருணை" எனப் பரிமேலழகரும், "ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம்" எனப் புறநானூற் றுரைகாரரும் கூறுப. "அருளென்னும் அன்பீன் குழவி" (குறள் 757) எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவனார் கூறியருளியவாற்றால், அருள் அன்புகாரணமாகத் தோன்றுமென்பது பெறப்படும். இவை யாவும் அருளின் பொதுவியல்பாகும். தன்பாற் பயிலும் மாணவர்மாட்டன்றி, ஏனையார் மாட்டும் இயல்பாகக் கொள்ளும் நேயத்தையே ஈண்டு "அருள்" என்றார் என்பது ஆசிரியர் கருத்தாம். இனிப் பழையவுரைகாரர் "சருவபிராணிகளுடைய இதாகிதங்களும் தனக்கு வந்தாலொத்திருக்கும் கிருபை" யென்பர். பிறவுயிர்க்குண்டாகும் இதம் தனக்குவந்தாற்போலக் கருதும் கருத்துடைமை "மன்னுயிர்க்கின்பந்தன்மீக் கூர்தலும்" (3) என்பதன்கண் அடங்குதலின், அது நிரம்பாமையறிக.

அறிவாவது பொருளின் உண்மையியல் புணர்தல். "நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறுணர்தல்" என்பர் நச்சினார்க்கினியார். உயிருடையன யாவும் அறிவுடையவேயாகலின், அவை யனைத்தும் நன்மை நாடலும் தீமை நாடாமையும் செய்தலின், இவர் கூறுவது அறிவின் பொதுவியல்பாம். "அறிவெனப்படுவது பேதையார் சொன்னோன்றல்" (கலி. 133) என ஆசிரியர் நல்லந்துவனார் கூறியது,

அறிவுடையார் செய்யும் சிறப்புடைச் செய்கைகளை அவர் அறிவின் மேலேற்றி யுபசரிக்கும் இயைபு கருதியாகலின் ஈண்டைக்குக் கொள்ளப்படாது, "இருள்தீர் பொறையும்" என்புழியடங்கும். பழைய வுரைகாரர், "கல்வியினாலாகிய பொருணீதிகளை யறியும் ஞானம்" என்பர். எனினும், ஈண்டுக் கூறிய அறிவாவது, தான் கற்பிக்கும் பொருள்களுள் தகுவனவற்றினியல்பை அறிதலும், அதனைக் கொள்ளும், மாணவன் கொள்வகை யறிதலும், அறிந்தவழி அதனைக் கொடைக்குரிமரபினாற் கொடுத்தலும் செய்யும் போதனை ஞானம் என்றல் சிறப்பாம். இதனை உபதேசஞானம் எனினுமாம். இதுவே யாசிரியர்க்குரிய அறிவுவகையிற் சிறப்புடைய தென்பதனைக் கொற்றவன் குடி உமாபதிசிவனார், சங்கற்ப நிராகரணத்து, "பெருங்கடலுதவுங் கருங்கடுவாங்கி, கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள், பாலரை யுணர்த்து மேலவர் போல, கேட்போரளவைக் கோட்படுபொருளால், அருளிய கலைகள்" (சங்கற். 2) என்று கூறுமாற்றானு முணர்ந்து கொள்ளப்படும்.

பொறையாவது "காரணம் பற்றியாதல், மடமையானாதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை யவன்கட் செய்யாது பொறுத்தல்" என்பர் பரிமேலழகர். போற்றாதார் பொறுத்தற்கரிய தீங்கு செய்த வழியும் அவரைப் பொறுத்தற்கண் ஒருவர்க்குப் பொறையறம் சிறந்து காட்டும் நன்மை கருதி, "பொறை யெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்" (கலி. 133) எனச் சான்றோர் கூறுப. பழைய வுரைகாரர் "சகித்தற்கரிய வெகுளியும் துன்பமும் வந்தவிடத்துப்" பொறுத்தல் என்பர். மாணாக்கர்க்கு அறிவு கொளுத்துமிடத்து ஒரோவழி யவர்பால் திரிபுணர்ச்சியும் தவறும் தோன்றினால், அவற்றைப் பொறுத்து, அவற்றிற் கேதுவாகிய மனச்சழக்கினை யுணர்ந்து போக்கும் பொறை



யுடைமை ஆசிரியர்க்கு இலக்கணமாகலின், பொறை யீண்டுக் கூறப்பட்டது. பொறாதவழி ஆசிரியன், தன் மாணவர்க்குச் செய்யும் அறம் கெடுவதேயன்றி, மாணவர் நெஞ்சத்து அச்சம் பிறந்து அவரது அறியுந் தன்மையைக் கெடுத்து அறியாமையாகிய இருள் சூழ்வித்தலின் ஆசிரியன்பால் சொல்லிழப்பும், மாணவர்பால் காலக்கேடும் பயனில் முயற்சியுமாகிய குற்றம் நிகழ்வது கருதி, "இருள்தீர் பொறை" என்றார் என்க.

வாய்மையாவது தமக்கும் பிறர்க்கும் எவ்வகையினும் தீங்கு பயவாத மெய்யும் பொய்யும் கலந்த மொழியினைக் கூறுதல் என்று சான்றோர் கூறுவர். உண்மைப் பொருளை யுணர்த்துதற்கண், ஒரோவழித் தீங்கு பயவாத பொய்மையும் மறை முகத்தால் கூறுதல் நூற்பொருளுணர்த்தும் ஆசிரியன்மார்க்குக் கடன்மை யாதல்பற்றி, "வாய்மை" எனப் பொதுப்படக் கூறினர். பழைய வுரைகாரர், "பிறர்க்குத் தீங்கறச் சொல்லும் மெய்வசனம்" என்று கூறினர்.

தவமாவது "இராக துவேஷத்தினால் பிராணிகளுக்கு வருத்தம் செய்யாமை" என்பது பழையவுரை. தாமுற்ற நோயைப் பொறுத்தலும், பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாமையும் தவமாம் என்பது சான்றோர் கருத்து. மனம், பொறிகளின் வழியுழன்று, ஒருப்பட்டு நில்லாதவழி, உண்மையுணர்தலும், உணர்ந்ததனை மாணாக்கர்க்குத் திரிபின்றி யுணர்த்தலும் தவமும் ஆசிரியர்க்கு வேண்டப்படுவதாயிற்று.

தானமாவது, "அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல்". அதனை, யீண்டு, "பக்குவான்மாக்களுக்கு உபகரிக்கும் ஞானக்கொடை" யென்பர் பழைய வுரைகாரர். ஞானக் கொடையின்கண், மாணவரது பக்குவமுணர்ந்து எண்பொருளவாகச் செலச் சொல்லி நல்வழிப்படுத்துதலால் இம்மையிற் புகழும் பூசையும் பெறு

வதேயன்றி, அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் எய்தும் மாண்புண்மையின், "தானமாட்சி" யென்றார். எனைத் தானம் செய்வோர் புகழும் புண்ணியமும் நோக்கி நிற்பாராக. ஞான தானம் புரிவோர், "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" (திருமந். 85) எனும் நோக்கமுடையாராதல் பற்றி, மாட்சிகூறினா ரெனினுமாம்.

"பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றிற், பதியினைப் போற்பசு பாசம் அனாதி" (திருமந். 115) எனச் சான்றோர் கூறுப. ஆயினும், பதிக்கும் பசுவிற்கும் உள்ள இயைபு ஆண்டானுக்கும் அடிமைக்குமுள்ள இயைபே என்றுங் கூறுப. ஆகலின், பசுவெல்லாம் ஆண்டவற்கும், அவன் அன்பர்க்கும் அடிமைத் தொழில் புரியும் அறமுடையவாம். ஆகவே, பதியாகிய பரமன் உயிர்தோறும் நின்றவழி, அவ்வுயிர்கட்குச் செய்வன அவற்கேயாம் என்னும் இயைபு பெறப்படும். படவே, அவ்வுயிர்க்குத் தன்னினும் இன்பம் மிகவுண்டாகுக என வேண்டுவதும் ஒருவாற்றால் ஆண்டவனை நோக்கிக் கூறியதாய் அவற்குப் புரியும் வழிபாடுமாகலின், "மன்னுயிர்க் கின்பம் தன்மீக்கூர்தலும்" (3) ஆசிரியர்க்கு வேண்டப்படுவதாயிற்று. அருளறமே யாசிரியர்க்குத் திருமேனியென அறிவுநூல் கூறலின், அவர் செயல் நலம் இதனால் வெளிப்படுதலால் இது கூறினாரெனினுமாம்.

பரமன் அருளிய ஒழுக்க நெறியினை ஆசிரியன்மார் ஒழுகிக் காட்டிய வழி மாணவரும் அவ்வொழுக்கத்தினை மேற்கொண்டு விழுப்பம் பெறுவராகலின், "ஒழுக்கமும் விழுப்பமும்" ஒருசேரக் கூறினர். "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப்படும்" (குறள். 131) எனச்சான்றோரும் கூறினர். "மன்னுயிர்க் கின்பந் தன்மீக் கூர்தல்" (3) என்ற குணநலம் அழுக்கா றளதாயவழிச் சிறவாமையின், "அழுக்காறின்மை"யினை ஈற்றிற் கூறினர். அழுக்காறின்மை



யொன்றே எனைக் குணங்களால் எய்தும் நலமெல்லாம் பயக்கும் நல்லறமாகலின் இவ்வாறு கூறினர் என்க. "அறமாவது அழுக்காறின்மை" என ஆசிரியர் சேனாவரையர் எடுத்துக் கூறுதல் காண்க. (தொல். சொல். சூ. 5. உரை) இனி, எனையாசிரியன்மார் எய்தும் சிறப்பினைக்கண்டு பொறாதவழி, அவரோடு அளவளாவிப் பொருளாராய்ச்சியால் உண்மையுணர்தல் கூடாதாகலின், அழுக்காறின்மை ஆசிரியர்க்கு வேண்டப்படுவதாயிற்று என்றுமாம்.

புண்ணியம் இக்கூறிய குணங்களைக்கொண்டு மண்மிசையுருக்கொண்டு வந்ததென்கின்றாராகலின், அவ்வுருவுக்குரிய ஞானப் பொறியும் கன்மப் பொறியும் கூறினர். "கைகண் தலைவாய் கால்செவி மூக்குயர், மெய்கொண் டென்வினை வேரறப் பறித்த, மெய்கண்ட தேவ" (இருபாவிரு. 10) என அருணந்தி சிவாசாரியர் கூறுமாற்றானுமுணர்க. கண் முதலிய ஞானப் பொறியாவன: கண், காது, மூக்கு, வாய், மெய் என்பன. கருமப் பொறியாவன: கால், வாக்கு, பாணி, பாயு, உபத்தம் என்பன. ஏனைய பொறிகளைப் போலாது, கண் தானே பொருளை யுற்றறியும் சிறப்புடைமையின் அதனை விதந்தும், புலனாகிய பொருளின் சிறப்பியல்புகளை யறிதற்கண் ஞானப்பொருளைக் கொண்டு சென்று அருகிருத்தும் தொழிற் சிறப்புடைமையின் கால்களை விதந்தும் கூறினர்.

பூண், துகில், பிணையல் என்பவற்றிற்குக் காரணமாகிய பொருளின் மாண்பும், அவற்றின் காரியப்பொருள் பிறத்தற்கு ஏதுவாகிய செய்வினை மாண்புமாகிய இருவகை மாண்புமடங்க, "மாண்பார், பூணுந்துகிலும் பாண்விரி பிணையலும்" (5, 6) என்றார். பூண், திருநீறும் குண்டலமும் திருவக்கமாலையும் பிறவுமாம். துகில், உடை கோவணமும் கீளும் பிறவுமாம். பிணையல், மலர்மாலை பூத்தொறும் தேடிச் சென்று நுகர்தற்குரிய தேனை, அது நிறைந்த பலவாகிய மலர்களால் தொடுக்

கப்பட்ட மாலைக்கண், வண்டினம் சிறு முயற்சியுமின்றி நுகர்ந்து மகிழ்ந்து பாடுகின்ற சிறப்புணர்தற்குப் "பாண்விரி பிணையல்" என்றார். இதனாலும் ஆசிரியரது கருணை மிகுதி குறிப்பாய் வற்புறுத்துதல் காண்க. இனிப் பழைய வுரைகாரர், பண்பு என்பதனை வேறு நிறுத்தி, மக்கட் பண்பென்னும் சிவகாருணியத்தினா லுண்டான பாச வைராக்கியமும், குருபத்தியும், ஞான சமாதியும் பண்பாம் எனக் கூறி, அருள் முதலாக அழுக்காறின்மையீறாகக் கூறிய பத்தையும் பூணாகவும், ஞானேந்திரிய கன்மேந்திரியமாகிய பத்தனையும் துகிலாகவும், பாசவைராக்கிய முதலிய மூன்றனையும் பிணையலாகவும் கூறுவர். பாண், பாட்டு. வண்டென்பது ஆற்றலால் வந்தது. பாண் விரிதற்கேதுவாகிய பிணையல் என்க.

தன்பாற் போந்த மாணவர் எத்துணை யறியாமையுடையராயினும், அதனையறப் போக்கி, உண்மை யுணர்வு கொளுத்தும் ஆண்மையும் பெருமையும் உடையார் என்றற்கு, "ஆற்றல் எம்குரிசில்" என்றார்.

இதுகாறுங் கூறியவாற்றால் புண்ணியம் மனித வுருவத்தோடு, அருள்முதலாகக் கூறியவற்றைக் கொண்டு, பூண் முதலியவற்றை யணிந்து மண்மிசை வந்தாற் போலும் சிறப்புடையவன் எங்கள் குருபரன் என்பதாம்.

9. குணப்பொற் குன்றம் வணக்க வாரா
ஐம்புல வேழத்தின் வெங்தொழில் அவியக்
கருணை வீணை காமுறத் தழீஇச்
சாந்தக் கூர்முள் ஏந்தினன் உறீஇத்
13. தன்வழிக் கொண்ட சைவ சிகாமணி.

இது குணக்குன்றாகிய எங்கள் ஆசிரியன் கருணை வீணையும், சாந்தமாகிய தோட்டியும் கொண்டு, ஐம்புல வேழத்தின் அழிதொழில் அடக்கும் சைவசிகாமணி என்கின்றது.



உரை முடிவு :—குன்றமாகிய குரிசில் வேழத்தின் தொழில் அவிய, வீணை தழீஇ, கூர்முள் ஏந்தி, தன்வழிக் கொண்ட சைவ சிகாமணியாவன் என்பது.

உரை:— குணங்களால் மேருமலையை ஒக்கும் (முற்கூறிய) குரிசில் அந்தக் கரணங்களாகிய பாகர் வணக்கமுயன்றுழியும் வணங்காத வன்மையினையுடைய ஐம்புலங்கள்மேற் செல்லும் ஆசையாகிய யானையின் வெவ்விய தொழில் கெட்டு வணங்குமாறு, கருணையாகிய வீணையினை அழகுற இசைத்தடக்கி, சாந்தமென்னும் கூரிய தோட்டியேந்தி, அவை மீட்டும் அத்தொழிலைச் செய்யாவகை யடக்கித் தன்வழியே ஒழுகப் பண்ணின சைவசமய முடிமணியாவன்.

பொற்குன்றம், மேருமலை; "பொற்குன்றம் சேர்ந்ததோர் காக்கை பொன்னாம்" (சுந்.தே. புனவாயில் 4) என்றாற்போலப் பெருமையும், சலியாமையும் உடைமையின், "குணப் பொற்குன்றம்" என்றார். "குணமென்னும் குன்றேறி நின்றார்" (குறள். 29) என்றார் திருவள்ளுவனாரும். "நிலையினிற் சலியா நிலைமையானும், பலவுல கெடுத்தவொரு திறத்தானும், நிறையும் பொறையும் பெறுநிலையானும், தேவர் மூவருங் காவலானும், தமனியப் பாரைச் சைவ மாகியும்" (கல். 11) என்றதனாற் சலியாமை முதலியன மேருவிற்குச் சிறப்பாதலறிக. "பெருமையாலும், சுத்தியாலும், பிறழா நிலைமையாலும் மகாமேருவை யொப்போன்" என்பது பழைய வுரை.

வாராத என்னும் பெயரெச்சத் தெதிர்மறை ஈறுகெட்டு வேழம் என்னும் பெயர் கொண்டது. அந்தக் கரணமாகிய பாகர் என்பது எஞ்சிநின்றது. புலம், ஆகுபெயர். புலம் ஐந்தாகலின், ஆசையும் ஐந்தாயிற்று. "ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள், ஈசனோடாயினும் ஆசையறுமின்கள், ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள் ஆசை விடவிட ஆனந்த

மாமே" (திருமந். 2615) என்றதனால், ஆசையின் கொடுமையுணர்ந்து கொள்க. பாகர்க்கு அடங்காத யானையின் வெவ்விய தொழில் கெடுமாறு, வல்லானொருவன் யாழிசைத்துத் தோட்டியால் அடக்கித் தன்வசமாக்குதல் போல, அந்தக்கரணத்தால் அடக்க முடியாத ஐம்புலங்களிற் சென்று திரியும் ஆசை யடங்குமாறு, கருணையால் அதன் செயலைக் கெடுத்து, சாந்த குணமாகிய தோட்டியால் தன் வயமே நிறுத்திக் கொள்ளும் நீர்மையனாகிய குருபரன் என உருவகம் விரித்துக் கொள்க. யானை யாழிற்கு வசமாம் என்பது. "தாழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல், யாழ்வரைத் தங்கியாங்கு" (கலி. 2) என்பதனாலறிக. "ஆனைகள் ஐந்துமடக்கி அறிவென்னும், ஞானத்திரியைக் கொளுவி" (திருமந். 2316) என்பர் திருமூலனார்.

வேழத்தின் வெங்தொழில் தனக்கும் பிறவுயிர்க்கும் தீங்கு பயத்தல்போல, ஆசையின் தொழிலும் இருபாலும் தீமை விளைத்தலிற் றீராமையின் பயவுவமம் கொண்டார். வீணைபோலக் கருணையும் உயிர்களால் விரும்பப்படுதலின், தொழிலுவமம் இசையால் வணக்கப் பெற்ற வழியும், யானையின் வெங்தொழிற்குரிய வெம்மை கெடாமையின், அதுவும் அறக்கெடுதற்குத் தோட்டி வேண்டப்படுதல்போல, கருணையால் தன் வசமாகிய மனத்தின்கண், இயல்பா யெழும் ஆசையனைமையின், அது தோன்றாமைப் பொருட்டு அம்மனத்துட்சென்றுதைக்கும் கோல்போறலின், "சாந்தக் கூர்முள்" என்றார். ஆசையறுத்தலும், கருணை செய்தலும், சாந்தம் மருவுதலும் சைவத்துக்குச் சிறப்பாதல் குறிப்பார், "தன் வழிக் கொண்ட சைவ சிகாமணி" யென்றும், கருணையாலும், சாந்த குணத்தாலும் ஆசையினை யறுத்து சிவானந்தம் பெறும் சைவர் போலாது, ஏனையோர் அது செய்யுமாறு காட்டி அச்சிவானந்தம்பெறப் பண்ணும் பெருமை நினைந்து,



"சைவ சிகாமணி" யென்றும் கூறினர். சிவத்தோடு கூடும் செம்மை நெறியே சைவம் எனப்படுவது. "சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" (திருமந். 1512) என்பர் சான்றோர். இவ்வாறு குருமூர்த்தமாய் எழுந்தருளிச் சைவ நெறியை விளக்கிய சான்றோரைச் சைவ சிகாமணி யென்னும் மரபு, "பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதியிற், சைவ சிகாமணி" (இருபாவிரு. 4) எனப் பிற சான்றோரும் கூறுதலால் அறியப்படும்.

இதனாற் பயன், குணங்களால் நிறைந்து, கருணை, சாந்தம் முதலிய சிறப்புக் குணங்களால் ஆசையறுத்துச் சிவசம்பந்தம் பெறுதல் சைவம் என்பதும், அவ்வாறு சைவனாகியதோடு, ஏனையோரும் சைவராம் வண்ணம் சைவத்தின் செம்மை நெறியினை யுபதேசிக்கும் எங்கள் ஆசிரியன் சைவ சிகாமணியாவன் என்பதாம்.

14. பரமா னந்தத் திருமா முனிவன்
வளமலி சேவடி வழுத்தி
உளமலி யுவகை யுற்றனம் பெரிதே.

இது முனிவனாகிய ஆசிரியன் திருவடி வழுத்துதலாற் பிறக்கும் உவகையால் ஊக்கம் மிகுதலின், இந்நூல் இனிது முடியும் என்கின்றது.

உரை முடிவு :—முனிவனாகிய குரிசில், சேவடி வழுத்துதலால் உவகை பெரிது உற்றனமாகலின், இந்நூல் இனிது முடியும் என்பது.

உரை :—மேலான ஆனந்தத்துக் கேதுவாகிய சைவத் திருவினையுடைய மாமுனிவனாகிய எங்கள் ஆசிரியனுடைய வளவிய சேவடிகளைப் பரவுதலால், ஊக்கத்துக்கேதுவாகிய உவகையினை மிக அடைந்தேம்; ஆகலின், இந்நூல் இனிது முடியும் எ - று.

பரம், மேன்மை. சிவானந்தத்தினும் மேலான ஆனந்தமின்மையின், அதனைப் பயக்கும் திருவினை, "பரமானந்தத் திரு" என விசேடித்தார். பசுபாசபுண்ணியங்கட்கேதுவாகிய வனைத் திருவெல்லாம் முனிந்து முனிவனானது, இச்சிவானந்தப் பெருந்திருவினை விழைந்தேயாகலின், "திருமாமுனிவன்" என்றார். சிவஞானத்தால் சிவானந்தப் பெருந்திருப்பெற்று, சிவபோகம் துய்க்கும் சைவரே அடியாராவர் என்றும், அவர் திருவடி பரவும் ஞானமே சிவமாக்கும் திருவடி ஞானம் என்றும் கூறுபவாகலின், ஆசிரியன் திருவடியினை "வளமலி சேவடி" என்றார். "அடியார் சிவஞானமானது பெற்றோர்" (திருமந். 1672) என்றும், "திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்" (திருமந். 1598) என்றும் சான்றோர் கூறுதல் காண்க. வழுத்தி யென்னும் செய்தெனெச்சம் காரணப் பொருட்டு. உளம், உள்ளம்; ஊக்கத்தின் மேற்று; "மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" (குறள். 595) என்றாற் போல. பழையவுரைகாரர், ஆன்மா என்று கொள்வர். ஆகலின் என்பது முதலாயின குறிப்பெச்சம். குருவழிபாட்டால் தான் எய்திய ஆனந்தமிகுதியால் ஊக்கஞ் சிறந்து இறுமாந்து கூறலின், பன்மை வாய்பாட்டாற் கூறினார். "சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர், அவனை வழிபட்டங்காமாறொன்றில்லை, அவனை வழிபட்டங்காமாறு காட்டும், குருவை வழிபடிற் கூடலுமாமே" என்பது திருமந்திரம் (2119).

இதுகாறும் கூறியவாற்றால், புண்ணியமூர்த்தியாகிய எங்கள் குருபரன் குணக்குன்றாய், சைவசிகாமணியாய், பரமானந்தத் திருமாமுனிவனாய் விளங்குகின்றான்; அவன் வளமலி சேவடி பரவுவதால் உவகை மிகவுற்று ஊக்கம் சிறந்தோமாகலின், இந்நூல் இடுக்கணின்றி இனிது முடியும் என்றவாறாம்.

---

# திருவேங்கடம் அல்லது திருப்பதி

[பொன். சாமிநாத தேசிகர்]

**ப**லவுயிர்களையும் பயந்த அன்னையார் பார்வதி தேவியார். அத்தேவியாரையும் ஈன்ற பெருமை பனிமலை எனும் பருவத ராஜனுக்கே உரியது. அம்மலையரசன், பல மணி முடிகளோடும் வடபால் ஓங்கி விளங்கத் திகழ்வது நமது பாரத நாடு. அந்நாட்டிலே செந்தமிழ் நிலத்தின் சிறந்த வட எல்லையாய் உயர்ந்து விளங்குவது திருவேங்கட மலையாகும். பாரத நாட்டின் பண்டைப் பெருமைக்கு இமயமலை எடுத்துக் காட்டாவதுபோல் செந்தமிழ் நாட்டின் சிறப்பிற்குத் திருவேங்கடமலை திகழ்ந்த அரணாவது வியப்பில்லையன்றோ? அம்மலையைத் திருப்பதி மலை என்றும் கூறுவர். திரு-அழகு முதலியவற்றைக் குறிக்கும் ஓர் அடைமொழி. வேம் கடம் - பாவத்தை எரிப்பது. வணங்குவோரது பாவத்தைப் போக்கும் வண் கருணை வாய்ந்தது என்பது பொருந்தும். பதி - ஊர் என்னும் பொதுப்பெயரே அந்நகரைக் குறிக்குமாறு அமைந்துளது. ஆதலின், ஊர் எனச் சொல்லப்படும் சிறப்புடையது அவ்வூரே என்பதும் அமையும். அந்நகரில், மனங் கவரும் மலை ஒன்றுளது. அம்மலையில் வேங்கடாசலபதி என்னும் பெருமான் இருபாலும் இரு தேவியர் இசைந்து விளங்க எழுந்தருளியுள்ளார். திருப்பதி அல்லது திருவேங்கடமென்று சொல்லியவுடன், பொதுவாய் நம்மவர் கண்முன், மஞ்சள் நனைத்த உடையும் திருமண் திருநாமமும் திருத்துழாயும் துளவ மணிமாலையும் தோன்றும். அடியார்களின் கோவிந்தா கோவிந்தா என்னும் முழக்கமும் காதில் ஒலிக்கின்றாற்போலிருக்கும். ஆகவே, மகாவிஷ்ணு எழுந்தருளியிருக்கும் மாண்புடையது என மதித்து வருகிறோம் என்பது வெளிப்படை. ஆனால், தமிழ் நாட்டின் வட எல்லையாயிருக்

கும் அம்மலை, தமிழ்த்தெய்வமாகிய முருகன் திருத்தலமே என்பதும், ஆங்குள்ள வைணவப் பேரன்பர்களின் பேரன்பினால் மகாவிஷ்ணுவாய் மாறியிருக்க வேண்டுமென்பதும் கீழ் வருவனவற்றால் அறியலாகும். முருகப் பெருமான் முதல் முதல் கைலையங்கிரியிலிருந்து எழுந்தருளித் தங்கியது திருப்பதி மலை எனக் காந்தம் என்னும் கந்தபுராணம் கழறுகின்றது. அவர் தங்கிய நகரம் ஒவ்வொன்றும் முருகனுக்குரிய ஒவ்வொரு முக்கிய க்ஷேத்திரமாகுமென முறையிடுகின்றது. தமிழ் நாட்டில், மக்களுக்கு வைத்து வழங்கும் வேங்கட சுப்பிரமணியன் என்னும் பெயரும் இதனை வலியுறுத்துவதாகும். அன்றியும், முருகப் பெருமானது முன்னடியாரான அருணகிரியார் முருகன் திருத்தலங்கட்கே திருப்புகழ் பாடியுள்ளார் ஆதலின் இம்மலைக்கும் திருப்புகழ் உண்டு. பிற மகாவிஷ்ணு க்ஷேத்திரங்கள் திருப்புகழ் பாடப்பெறவில்லை. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாம் முருகனைக் கருதியே நா முதலியவற்றில் அலகு போட்டுக்கொள்வதும் அங்கப் பிரதட்சணம் முதலிய செய்வதும் தமிழ் நாட்டு வழக்கம். அவ்வழக்கத்தை இம்மலைக்குச் செல்லும் அன்பர்கள் மட்டுமே அனுசரிக்கின்றனர். வேறு விஷ்ணு க்ஷேத்திரங்களில் இவ்வழக்கத்தைக் காணோம். இரு பக்கத்து இருக்கும் இரு தேவியர்களையும் வைணவ சம்பிரதாயத்துக்கேற்ப இன்று இரு தாயார்களாக வழங்குகின்றனர். ஆயினும், வள்ளி தெய்வயானையாம் இரு தேவியரையுமே இவ்வாறு வழங்கலாயினோம் என்பதும் பொருந்துமன்றோ? தமிழ் இலக்கண நூலோர், நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து பிரிவாகப் பிரித்து வகுத்ததில் குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமென்றும், அதற்குரிய தெய்வம் முருகன் என்றும் அமைத்ததையும் உற்று நோக்கின் மலைக்குரிய தெய்வம் முருகனே என்பதும், மகாவிஷ்ணு



அல்லர் என்பதும் சொல்லாமலே விளங்கும். இத்தகைய பலவற்றாலும் அம்மலை முருகனுக்கே உரியதென்பதும் ஆங்கு எழுந்தருளியிருப்பவர் முருகனே என்பதும் தெள்ளிதின் விளங்கும். அன்றியும், தமிழ் நாட்டு வடஎல்லையாகிய வேங்கடமலையில் தமிழ்த் தெய்வமாகிய முருகன் எழுந்தருளியிருப்பது பொருத்த முடையதுமாகும். மலையாளத்தில் மாமன் சொத்திற்குரியவர் மருமகன் என்பதை மருமக்கள் தாயமென்னும் வழக்கத்தால் அறியலாம். தமிழ் நாட்டில் மருமகன் சொத்திற்கு மாமன் உரியவன் ஆகியதை இவ்வகையில் அறிகிறோம். இதற்கு மாமன் தாயம் எனப் பெயரிட வேண்டும் போலும். அன்றியும், இதற்குச் சமாதானம் கூறும் ஆராய்ச்சி விரும்பாத வைணவ அன்பரிற் சிலர் 'திருக்குற்றாலத்தில் எங்கள் பெருமானை அகத்தியர் சிவனாக்கினாரே அது மட்டும் சரியா?' எனக் கேட்பர். அதிலிருந்து, மறைபொருளாய் இது பதிலுக்குப் பதில் என்பதை ஒப்புக்கொள்வதாக இருப்பினும் வார்த்தையில் ஒப்புக் கொள்வதை எதிர்பார்க்கவும் முடியாது. ஆனால், நாம் எதிர்பார்க்க வேண்டுவது தான் என்னவெனில், முன்னாளில், திருக்குற்றாலத்தில் அகத்தியர், பெருமாளைத் தவ வலியால் சிவனாகுமாறு விரும்பச் சிவனானார். இந்நாளில் திருவேங்கடத்தில் முருகனையே பெருமாளாக ஆக்கி விட்டோம் என்று ஏற்பட்டுவிடின் போதும் என்பதுதான். ஆகவே, இதனை ஆராய்வது உண்மையறிய அல்லாது வைணவ அன்பர்களை வம்புக்கிழுக்க அல்ல என்பதை மும்முறை சொல்லுகிறோம். ஆனால், ஊரறிய, உலகமறியப் புராண பூர்வமாய்க் கடல்குடித்த குடமுனியாகிய அகத்தியர், பெருமாளை அன்பின் பெருக்கத்தால் சிவலிங்கமாக்கிய செய்தியை நாமே ஒன்றை மற்றொன்றாக மாற்றி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் இதனோடும் ஒப்பிட்டுக் கூறுதல் ஒரு வகையாலும் பொருந்தாததாகும்.

நிற்க எங்குல முழுதாளும் குமரவேள் எழுந்தருளிய திருத்தலங்களிற் சிறந்தது என எடுத்தோதப் பெறும் ஆறு படைவீடுகளிற் சில ஊர்கள் இன்னும் இன்னதென ஐயமறத் தெளிந்த பாடில்லை. அந்த ஐயங்களை மற்றொரு சமயம் எழுதக் கருதி யிருக்கிறேன். ஆராய்ச்சி பெருகிய இந்நாளில், தமிழர் தமிழ்க்குச் சிறப்புத்தேடும் இவ்வேளையில் தமிழ்த் தெய்வமாம் முருகன் திருத்தலத்தைப் பற்றிய ஐயமும் தெளிய நேரின் நலமென்று இது எழுதத் தொடங்கினேன். அறிஞர் அன்புகூர்ந்து ஆய்ந்து நடுநிலை உண்மை காண வேண்டுகிறேன்.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தின நியமம்

## இராத்திரி

3 மணி முதல் 4 மணிவரை சிவத்தியானமுஞ் சிவமூலமந்திரசெபமுந் தோத்திரமுஞ் செய்க.

4 மணி முதல் 5 மணிவரை திருவள்ளுவர் பரிமேலழகருரையும் திருக்கோவையாருரையும் படிக்க.

5 மணி முதல் 6 மணிவரை தந்ததாவனமும் அநுட்டானமுஞ் சிவாலய பிரதக்ஷிணமுஞ் செய்க.

## பகல்

6 மணிமுதல் 8 மணிவரை Proof பரிசோதிக்க.

8 மணிமுதல் 10 மணிவரை சிவபூசை செய்து போசனம் பண்ணுக.

10 மணிமுதல் 12 மணிவரை சைவசித்தாந்தம் படிக்க.



12 மணிமுதல் 2 மணிவரை புத்தக பரிசோதனஞ் செய்க.

2 மணிமுதல் 4 மணிவரை உரை செய்க.

4 மணிமுதல் 5½ மணிவரை சம்ஸ்கிருதம் படிக்க.

5½ மணிமுதல் 6 மணிவரை உலாவுக.

## இராத்திரி

6 மணிமுதல் 6½ மணிவரை அநுட்டானம் பண்ணிச் சிவாலய தரிசனஞ் செய்க.

6½ மணிமுதல் 9 மணிவரை புத்தக பரிசோதனஞ் செய்க.

9 மணிமுதல் 10 மணிவரை புராணவசன மெழுதுக.

10 மணிமுதல் 3 மணிவரை நித்திரை செய்க.

அமாவாசை பௌர்ணிமைகளிலும் பிரதமைகளிலும் சைவசித்தாந்த முதலியவை படித்தலொழித்து அவற்றிற்குரிய நேரத்திலே மற்றைய நூல்கள் வாசிக்க.

சிவாலயப் பிரதக்ஷிணம் செய்யும்போது திருவாசக மனனம் பண்ணுக.

உலாவும்போது சித்தியார் சிவஞானபோதமூல மனனம் பண்ணுக.

ஜன்ம நக்ஷத்திரந்தோறும் விசேஷ பூசை செய்து அட்டோத்திரசத நாமார்ச்சனை பண்ணுக. மாகேசுர பூசை செய்க. சுப்பிரமணிய சுவாமிக்குச் சகச்சிரநாமார்ச்சனை செய்விக்க.

பிரதோஷந்தோறும் தேவார தோத்திரத்தோடு சிவ தரிசனம் செய்க.

கார்த்திகை நக்ஷத்திரந்தோறும் கந்தரலங்கார தோத்திரத்தோடு சுப்பிரமணிய சுவாமி தரிசனஞ் செய்க.

கார்த்திகைச் சோமவாரந்தோறும் சிவசந்நிதியில் நெய் விளக்கிடுக.

சமயகுரவர் நால்வர்க்கும் சேக்கிழார் நாயனூர்க்கும் சந்தானகுரவர் நால்வர்க்கும் திருவள்ளுவ நாயனூர்க்கும் குருபூசை செய்க.

வருஷந்தோறும் பெரியபுராணம் திருவிளையாடற் புராணம் கந்தபுராணம் உபதேசகாண்டம் கோயிற்புராணம் திருவாதவூரடிகள் புராணம் காசிகண்டம் இவைகளை நியமமாகப் படிக்க.

நாடோறும் காலையிற் சீரக கஷாயமேனும் நன்னாரிக் கஷாயமேனும் உட்கொள்க. அல்லது சீந்தின்மாவேனும் சிவகரந்தைச் சூரணமேனும் பொற்றலைக்கையாந்தகரைச் சூரணமேனும் வல்லாரைச் சூரணமேனும் உட்கொள்க.

வாரத்துக்கு இரண்டுதரம் தைலாப்பியங்க ஸ்நானஞ் செய்க. கண்ணுக்கு வெண்மிளகிட்ட எண்ணெயிடுக. உள்ளங்கால்களில் வெண்ணெய் தேய்ப்பித்துக்கொள்க.

மாதந்தோறும் முதற்பானுவாரத்திலே பேதி மருந்து உட்கொள்க. முதன்மாசத்துக் கணக்கெல்லாம் முடித்துக் கொள்க.

பக்ஷந்தோறும் *பஞ்சகற்பந் தேய்த்துக்கொள்க.

நாடோறும் பொற்றலைக்கையாந்தகரை நெய் கொண்டு கண்ட சுத்தி செய்துகொள்க. —"இந்துசாதனம்"

*பஞ்சகற்பம் - கடுக்காய்த் தோல், கஸ்தூரி மஞ்சள், நெல்லிப் பருப்பு, மிளகு, வேப்பம் வித்து என்பன.

## முக்கிய அறிக்கை

உங்கள் சந்தாவை இன்றே மணியார்டர் செய்க. 5-1-1936-க்குள் மணியார்டர் கிடைக்காவிடில் அடுத்த இதழ் வி. பி. தபாலில் வரும்.

# நமது பூர்வ ஆலயங்கள்

[பேராசிரியர் K. S. ஸ்ரீகாந்தன், M.A.]

புராதன காலத்திலும் இடைக் காலத்திலும் நம் பாரத நாட்டில் பல தேவாலயங்கள்—சிவாலயங்கள், விஷ்ணுவாலயங்கள்—குகாலயங்கள் — பொலிந்திருந்தன. அவை கலைகளின் பிறப்பிடமாயும், அக்கலைகளின் வளர்ச்சிக்கான கழகங்களாயும் விளங்கின. இவ்வாலயங்களில் கலைவல்லோர் அக்காலத்திற் காலத்துக்குக் காலம் கூடிக் கலை வளர்ச்சி சம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆலோசனை செய்து வருவர். கலைஞானக் களஞ்சியங்களாயிருந்த ஆலயங்கள் இப்போது அடைந்திருக்கும் சீர்கேட்டை என்னென்று எடுத்துரைப்பது; மீன்கடையின் நிலைமையை எய்திவிட்டன என்று கூறினும் பொருந்தும். கலைவல்ல புலவர்கள் வீற்றிருந்த இடத்தில், அந்தணர் வேதமோதிய இடத்தில், இப்போது காப்பிக் கிளப்புக்களும், பழவர்க்கக் கடைகளும், தையற்காரனின் துணி நிலயமுமே காணப்படுகின்றன. ஆன்ம லாபத்திற்கான, புத்தி விருத்திக்கான சம்பாஷணைகள் சம்வாதங்கள் நிகழ்ந்த ஆலயங்களில் இப்போது பிணக்குகளும், சண்டைகளும், சச்சரவுகளும் மலிந்துவிட்டன. எனவே, ஆன்மலாபம் அடைய விரும்புபவர்கள் இப்போது ஆலய தரிசனத்தால் ஆம் பயன் இல்லையென்று எண்ணுகின்றனர். இது சம்பந்தமாகப் பர்கூஸன் என்னும் அறிஞர் கூறியன ஈண்டுக் குறிப்பிடத்தக்கனவாம் "ஸ்ரீரங்கம் ஆலயத்தின் வெளிவீதி ஒரு கடைத்தெருவாய் விட்டது. அங்கு பலவித போஜனசாலைகள் உண்டு. யாத்திரிகர்களை இப்போஜனசாலைக்காரர் நயமொழிகளால் அணைத்துப், பின் அவர்களது அற்பப் பொருளைக் கவர்ந்து விடுகின்றனர். இராமேசுவரத்திலும் மதுரை

யிலும் நடக்கும் அநியாயங்களோ பலப்பல. அவற்றைக் காணும் பிரயாணி எவனும் அருவருவப்படையாமலிரான். அந்தோ, மேலான நோக்கத்தைக் கொண்டு ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ள இவ் வாலயங்கள் தகுதியற்றவர்கள் கையிற் சிக்கி ஈனநிலைமையை எய்தினவே என்று எவரும் இரங்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது'' என்பது மிஸ்ரர் பர்கூஸனின் கூற்று.

முற்காலத்திலும் இடைக்காலத்திலும் ஆலயங்கள் என்ன நிலைமையில் இருந்தன என்பதைப் பற்றி அறிதல் பயனுடைத்தாம். இவ்வாலயங்கள் ஜன சமூகத்தின் மீது எத்தகைய செல்வாக்குப் பெற்றிருந்தன, எத்தகைய மகத்தான சேவைகளைப் புரிந்தன, என்னும் இன்னோரன்ன வற்றை, சிலாசாசனங்கள் மூலமாக நன்கு அறியலாகும். மக்களின் சமூகவாழ்க்கையும் சமய வாழ்க்கையும் ஓர் ஆலயத்திலேயே அக்காலங்களில் தங்கி நின்றன. ஆலயங்கள் கட்டுவதில் முன்னாள் வாழ்ந்த மன்னர்கள் அவாவுற்றனர். சேரசோழ பாண்டிய மன்னர்களும் வட இந்தியாவில் உள்ள மன்னர்களும் ஆலயங்கள் ஸ்தாபிப்பதிலும், பழைய ஆலயங்களைப் புநருத்தாரணஞ் செய்வதிலும் ஒருவரோடொருவர் போட்டி இட்டுக்கொண்டு நின்றனர். அவர்கள் ஆலயங்களை அமைத்ததுமன்றி, அவற்றின் பராமரிப்பின் பொருட்டும் பல நிலங்களையும் பொருள்களையும் தருமசாதனஞ் செய்தனர். கோயில்களுக்குரிய காணி பூமிகட்கு வரி கொடுக்கத் தேவையில்லை. இனி ஆலயப் பராமரிப்பு ஒரு நிர்வாக சபையில் இருக்கும். ஆனால் விசேஷ தருமத்தின் பொருட்டுச் சாதனஞ் செய்யப்பட்ட பொருள்கள் பூசகர்கள் பொறுப்பிலேயே இருக்கும். ஆலயத்தைப் பரிபாலிக்கும் நிர்வாகசபையின் வேலைத்திறமை காலத்துக்குக் காலம் அரசினர் உத்தியோகத்தால் மேற்பார்வை செய்து மன்னனுக்கு அனுப்பப்



படும். உத்தமசோழன், பராந்தகன், இராஜஇராஜன் போன்றவர்கள் ஆலய பரிபாலன விஷயத்தில் மிகவும் சிரத்தை எடுத்தனர். இனி ஆலயங்களின் பரிபாலனத்தைக் கைக்கொண்ட நிர்வாக சபைகளும் தத்தம் கடமையை எல்லோர்க்கும் திருப்தி விளைக்குமாறு புரிந்து வந்தன.

முற்காலத்தில் இருந்த ஆலயங்களின் பொருள்களிற் பெரும்பான்மையானது சமூகச் சேவைக்கு உபயோகப்படுத்தப்படல் வேண்டும் என்ற நியதி இருந்தது. இது கட்டாய நிபந்தனை இன்றாயினும், கோவில் நிர்வாகிகள் சமூகச் சேவையில் அதிகம் கவலை எடுத்தனர் என்பதை இப்போது எமக்குக் கிடைத்துள்ள சிலாசாசனங்கள் மூலமாக நன்கு அறியலாகும். ஏழைகட்கு அன்னதானம் செய்வது கோவில்களின் பெரியதோர் கடமையாயிருந்தது.

முற்காலக் கோவில்கள் பல்கலைக் கழகங்களாகவும் விளங்கின. இலக்கணம், இலக்கியம், நியாயம், வைத்தியம் என்பனவற்றைப் பற்றிய சம்வாதங்கள் நாடோறும் இக்கோவில்களில் அறிஞர்களால் நிகழ்த்தப்படும்; வேதங்கள் இதிகாசங்கள் சாஸ்திரங்கள் என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி மக்களுக்குப் பயிற்றுவதற்காகப் பல காணிபூமிகள் பிரத்தியேகமாகத் தரும சாதனம் செய்யப்பட்டனவென்பது சிலாசாசனங்களினால் இப்போது அறியக் கிடக்கின்றது. திருவொற்றியூர் ஆலயத்துக்கு அத்தகைய ஒரு தருமசாதனம் செய்யப்பட்டிருப்பதாக இப்போது அறிகிறோம். தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் என்பனவற்றை ஓதுவதற்கும் விசேஷ சௌகரியங்கள் செய்யப்பட்டன. காஞ்சிக்குச் சமீபமாகவுள்ள திருக்கூடல் வேங்கடேசுவரப்பெருமாள் கோவிலின் பொறுப்பில் ஒரு வைத்தியசாலையும், கல்லூரியும் இருந்தனவென்று பழைய சாதனங்கள் மூலமாக அறிகின்றோம்.

ஆலயங்களில் ஆச்சாரியர்களுக்கு உந்நதமான பதவி அளிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்குப் பல வேலி நிலங்கள் அரசர்களால் அளிக்கப்பட்டிருந்தது. ஜனசமூகத்திலும் அவர்கட்குள்ள செல்வாக்கு அதிகமாயிருந்தது. ஆலயங்களில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம், மற்றும் பிரபந்தங்கள் என்பன ஓதுவதற்கு விசேஷ வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆலயங்கள் சங்கீத அபிவிருத்திக்கும் ஏற்ற நிலையங்களா யிருந்தன.

இனி, அக்காலத்தில் இருந்த மடங்களுக்கும் ஆலயங்களுக்குமிடையே மிகுந்த தொடர்பு இருந்தது. இந்த மடங்களின் அதிபதிகளாய் உண்மைச் சந்நியாசிகள் இருந்தனர். ஜனசமூக சேவை செய்வதில் மடங்களும் ஆலயங்களும் போட்டி இட்டுநின்றன.

இராஜராஜனின் காலத்தில் ஓர் ஆலயத்தின் பொறுப்பில் நாடகசாலையொன்றும் நர்த்தன மண்டபமொன்றும் இருந்தனவென்று அறியக் கிடக்கின்றது. நானுவித நாடகசாலை வைத்துப் போஷிப்பதற்காகப் பல வேலி நிலங்கள் தரும சாதனம் செய்யப்பட்டனவென்று மூன்றுவது குலோத்துங்க மன்னன் காலச் சிலாசாசனம் ஒன்று கூறுகிறது.

அக்காலத்திருந்த ஆலயங்கள் தற்போதைய வங்கி செய்யும் கடமைகளையும் செய்தன என்று அறிகிறோம். ஒரு கிராமப் பஞ்சாயத்து, கிராம மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக ஆலயம் ஒன்றிற் கடன்பெற்றதாக ஒரு சிலாசாசனம் கூறுகின்றது. பஞ்சம் நேர்ந்த காலங்களில் ஆலயங்கள் செயற்கரும் உதவிகள் செய்தன. ஆலயங்களுக்குரிய ஆபரணங்கள் தானும் பஞ்ச நிவர்த்திக்காக விற்கப்பட்டனவாம்.

"இந்து சாதனம்"



சித்து அசித்தாகாது; அசித்துச் சித்தாகாது; சித்திற் சேஷ்டிதனே கர்த்தா, மாயவன் ஆன்மவர்க்கமென்க. ௨௪

பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி
ஆசற்ற ஆகமங்கள் அறைந்திட அறிவின் றிங்கே
மாசற்ற மால்மா சாகி மாயையு முறுவ னென்னில்
கூசிப்பின் கொள்ளார் நல்லோர் உனக்காமிக் குழப்பு நூலே.

(உரை) பாசமாகிய அஞ்ஞானத்தைப் பசுக்களாகிய ஆன்மாக்கள் கைவிட்டுப் பதியாகிய கர்த்தாவைக் கூடுதலே முத்தியென்று குற்றமில்லாத ஆகமங்கள் சொல்லா நிற்ப, இங்கே மாலாகிய புருஷோத்தமன் அஞ்ஞானமுமாய் அஞ்ஞானத்தோடு கூடிய ஆன்மாவுமாய் நிற்பனென்று நீ அறிவின்றியே சொல்லின், இப்படி வேதாகமங்களுக்கு விருத்தமான மயக்கநூல் உனக்கேயாம். உயர்ந்தோர் இதனை நூலென்றுசொல்ல நாணிப் பின்பு அதன் அர்த்தமுங் கொள்ளார். ௨௫

பிரமம்நா னென்ற போது பிரமனோ டரியுங் கூடிப்
பரமனார் இகலி டாமே பார்த்திடர் பண்ணி நின்ற
உரமனார் அழலு ருபம் தன்னையு முணர மாட்டான்
கரமனுள் திகிரி ஏற்றான் கடவுளென் றறைவ தென்னே.

(உரை) ஒருகாலத்துப் பிரமாவும் விஷ்ணுவுங் கூடித் தங்களில் மாறுபட்டுச் சிருஷ்டிக்கையாலே நானே கர்த்தாவென்றும், இரக்ஷிக்கையாலே நானே கர்த்தாவென்றுஞ் சொல்லிய காலத்து, அப்பிரமவிஷ்ணுக்கள் தம்மில் மாறுபடாமல் இவர்கள் அகந்தையைக் கெடுப்பான் பரமேசுவரன் திருவுளம்பற்றி, உங்களில் நம்முடைய அடிமுடியறிந்தவன் கர்த்தாவென்றருளி ஒரு தழற்பிழம்பாய் நிற்கப் பிரமா திருமுடியைக் கண்டு வருவேனென்று அன்னமாகப் பறந்து தேடியும் விஷ்ணு சீர்பாதங் காண்பேனென்று பன்றியாய்ப் பாதாளத்தைக் கீண்டுங் காணுமல் இருவருக்கும் வியாகுலத்தை யுண்டாக்கி நின்ற உரத்தையுடைய பரமேசுவரனது திருவுரு இன்னபடியென்றும் விஷ்ணுவும் அறியமாட்டானுனான்; சக்கரத்தைக் கையிலே ஆட்சி நிலைபெற ஏந்தின விஷ்ணுவைக் கர்த்தாவென்று சொல்லுவது என்னையோ? ௨௬

௨௭

தோரி இறையன் றென்றே சிவமுனி ததீசி யோடே
போர்புரிந் திகல மாலைப் புக்கவன் பிடித்த டித்து
மார்பினி லுதைத்து மாறன் சக்கரம் வயிற்றில் வைத்திட்(டு)
ஏர்மலி படைப டைத்திட் டரிபட வெறிந்தா னன்றே. ௨௯௭

**உரை :**—புருஷோத்தமன் சைவமுநிவராகிய ததீசியாரோடு யுத்தஞ்செய்து மாறுபட அப்புருஷோத்தமனை, ததீசிமகாமுநிவர் உள்ளே புகுந்து பிடித்துப் பிரகரித்து மார்பிலேயுதைத்துச் சக்கரத்தைப்பறித்து முறித்து அப்புருஷோத்தமன் வயிற்றிலேவைத்து, அழகுபொருந்தினதோ ராயுதத்தைத் தாமே தருப்பையால் உண்டாக்கிப் புருஷோத்தமன் மயங்கிவிழ எறிந்தார். ஆதலால் புருஷோத்தமன் கர்த்தா அல்லன் என்று தெளிவாய். ௨௭

சூலிகாண் இறைமால் அல்லன் சூலியைத் தொழுந் துர்வாசன்
மாலினார் மார்மி திப்பத் திருமறு மார்ப னாகி
நூலினார் மார்பன் நோன்றாள் பட்டிடஞ் சுத்தமென்று
பாலினார் கடலான் ஆங்கே பரிவொடும் திருவை வைத்தான்.

**(உரை)** சூலபாணியே கர்த்தா விஷ்ணு அல்லன், சூலபாணியை வழிபாடு செய்யுந் துருவாசமகாமுநிவர் விஷ்ணுவைக் கோபித்து மார்பிலே மிதிப்ப அத்துர்வாசமகாமுனிவர் பாதம் பட்ட தழும்பு கொண்டே திருமறுமார்பனென்று பெயரையுடையனாகித் திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ளுமவன் பிரமரிஷியின் பாதம்பட்டவிடம் சுத்தமென்று பிரியத்துடன் இலக்குமியை அந்த மார்பிலே வைத்தானாகையால், புருஷோத்தமன் மலசம்பந்தியென் றறிவாயாக. ௨௮

தவகுண னாய்மால் சென்று தேவியைச் சக்க ரத்தால்
அவகுணஞ் செய்தன் றோடப் பிருகுவந் தவளைப் பார்த்துச்
சிவனல தறியே னாகில் இதுசெய்தோன் செறிகப் பத்துப்
பவமென மொழிய மாலும் பயப்பட்டுப் பதறி வீழ்ந்தான்.

**(உரை)** சிவபத்தரான பிருகுமகாரிஷியினுடைய பத்தினி தேவியைப் புருஷோத்தமன் விரும்பிப் புணரும்படி இருடியில்லாத சமயத்திலே செல்ல, அத்தேவி உடன்படாதபடியால் அவளுடம்பிலே சக்கரங்கொண்டு துர்க்குறிகளையிட்டுப் போக, பிருகுமகாரிஷி அவளுடம்பைக் கண்டு "யான் சிவனல்லது வேறொரு கடவுளில்லை யென்னுஞ் சிவபத்தன் மெய்யேயாகில் இது செய்தவன் பத்துப்பிறப்புப் பிறக்கக்கடவன்" என்று சபிக்கப் புருஷோத்தமனும் பயப்பட்டுத் துக்கித்து வீழ்ந்தான். ௨௯



பயப்பட்டுப் பரனை நோக்கித் தவம்பண்ணப் பரனும்தோன்றி
நயத்தஞ்ச லென்று வேண்டிற் றென்னென நார ணன்தான்
பெயர்த்தருள் பிருகு சாப மெனஅன்பன் பிருகு வென்ன
உயக்கொள்நீ பவந்தோ றென்ன ஓமென்றான் உலக நாதன்.

**(உரை)** அந்தப் பிருகுமுநிவர் சாபத்தினாலே பயப்பட்டுப் பரமேசுவரனை நோக்கித் தவசுபண்ணப் பரமேசுவரனும் அநுக்கிரகித்துப் "பயப்படாதே உனக்கு வேண்டியது எது" என்று கேட்ப, புருஷோத்தமன் பிருகுமுநிவர் சாபத்தைத் தீர்த்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப் பரமேசுவரனும் பிருகுமுநி நம்முடைய பத்தனென்றருள, ஆனால் அவன் சாபத்தாலே யெடுக்கும் பிறப்புத்தோறும் என்னை இரக்ஷித்தருள வேண்டுமென்ன, ஜகன்னாதனாகிய பரமேசுவரனும் அப்படியே இரக்ஷிக்கிறோ மென்றான். ௩௦

இப்படிப் பிருகு சாபத் தினைந்து பிறப்பின் வீழ்ந்து
மெய்ப்படு துயர முற்று வருபவன் விமலன் அல்லன்
எப்படி யானுஞ் சொன்னேன் இறைஅரி அல்ல னென்றே
மைப்படி கண்டன் அண்டன் மலரடி வணங்கி டாயே. ௩௧

**(உரை)** இந்த முறைமையிலே பிருகுமுனிவர் சாபத்தாலே ஒன்பது பிறப்புப் பிறந்து சரீரவருத்தமுற்று மேலுங் குதிரையாகப் பிறந்தும் ஜநநமரணப்படுபவன் மலரகிதனான கர்த்தாவல்லன். வேதாகம சாத்திரங்களானுஞ் சொன்னேன் மோக்ஷகர்த்தா விஷ்ணு அல்லனென்றே. இனி மோக்ஷகர்த்தா யாவனென்ன விரும்புதியாயின், நீலகண்டனாகிய மேலானவனே கர்த்தா. அவனது தாமரைமலர்போன்ற சீர்பாதத்தைச் சரியை கிரியா யோக ஞானத்தாலே வணங்கி நினது பவத்தை நீக்கிக்கொள்வாயாக. ௩௧

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**சிவஞான சித்தியார் சுபக்க உரையாசிரியர்**
**சிவஞான சுவாமிகள் செய்தருளிய**

## குரு வணக்கம்

**ப**ண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந்
தீயிரும்பு பாணி யுப்பு
விண்ணநில முடலுயிர்நீர் நிழலுச்சிப்
பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி புணர்வொளிபோற் பிரிவரிய
அத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட ஆறைநசைநமச்
சிவாயகுரு சரணம் போற்றி.

---

உ

## சிவஞான சித்தியார் பாடற்றொகை

### பரபக்கம்

முகவுரையிற் றசமெழுமூன் றதன்முப்பா னொன்று
மூதுலகன் முப்பானொன் றெண்ணைந்தாம் புத்தன்
திகழ்மூவர்க் கோரெட்டா நிகண்டனுக்கெட் டேழ்
சீவகனுக் கீரைந்தோ டிருமூன்றும் பாட்டன்
பகர்பதின்மூன் றீரைந்தே பாகரனி ரிரண்டாம்
பரிணாம நான்கிருநான் கேமாயா வாத
நிகழைம்மூன் றறுமூன்றாம் பாற்கரியற் கேழா
கீசுரர்க்குச் சதுராத்திரி யெழுமுப்பா னொன்றே.

### சுபக்கம்

ஐந்துதுதி யீரேழு மளவை யாகு
மாதிதனி லெழுபதுபின் னொருநூற் றாறு
நந்துசட் டயநாற்பா னவமும்பின் னவமு
நனிநான்கு நாற்பதினி லொன்றிழிந்தீ ராறுங்
கந்தன்முக மோராறுங் கரமங்கி ராறுங்
கருதிடுவெங் கணபதியைங் கரமுமிரு பதமுஞ்
சிந்தையிவை மூவொன்ப தொடுமுந் நூறுஞ்
சிவஞான சித்திசுவ பக்கமெனத் தெளியே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும்
# சிவஞான சுவாமிகள் உரையும்

---

**சீ**வஞானபோத நூற்பொருள் பிற்காலத்தார்க்கு இனிது விளங்குமாறு விரித்தல் யாப்பான் நூல்செய்வான் புகுந்த ஆசிரியர், எடுத்துக்கொண்ட பொருள் இடையூறு நீங்கினிது முடிதற்பொருட்டும், இந்நூல்நின்று நிலவுதற்பொருட்டும், முதற்கட் செய்துகொண்ட கடவுள் வாழ்த்து மாணக்கர்க்கு அறிவுறுத்தற்பொருட்டுச் செய்யுளாற் றெரிக்கின்றார்.

**விநாயகர் வணக்கம்**

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன்ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யும் தேவே. ௧

**(உரை)** கங்கையும் பிறையுங் கொன்றையுமணிந்த சடையானளித்தருளிய ஒரு கோடு முதலியவற்றை யுடையவனாகிய வாரணமுகத்தானுடைய திருவடிகள், பேரன்பானிடையறாது தம்மை வழிபட்டுத் தியானிப்போ ரறிவின்கண்ணதாகிய மலக்கோணைத் தீர்க்கும்; அதுவேயுமன்றி அயனரி முதலியோர் வாழ்வு மொருபொருளன்றென வெறுப்பச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையுந் தரும்.

சிந்தைத்திருகோட்டித் தெய்வத்தன்மை செய்யவல்ல தாள்களுக்கு, இடையூற்றையோட்டி இந்நூன் முடிவுபெறச் செய்தல்

அருமையன்றென்பது கருத்து. கங்கையின செருக்கடக்கிப் பிறையை
வாழ்வித்த பெருமான் மகனாதலானும் அச்சீலமுடைமை தெளியப்
படுமென்பார், ஆறுதருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றரு
மொருவாரண மென்றார். இதழியுடன் கூறினார் திரு அடை
யாள மாலையாதலின். இதழித்துணர்போலத் தாழ்ந்த சடையா
னென உவமத்தொகையாகக்கொண் டுரைத்தலுமொன்று. தருகோட்
டம்பிறை - தன்னாற் றரப்பட்டவளைவா னழகுபெற்ற பிறை. இரு
செவியனென்றது, இசையெச்சத்தால், இரண்டு முறம்போலுஞ்
செவியனெனப் பொருள்தந்து நிற்றலின், ஒருகோடு முதலியன
போலப் பிறிதினியைபுநீக்கிய விசேடணமாதற்கிழுக்கின்மையுணர்க.
யானையுறுப்புக் கழுத்திற்கு மேலன்றியின்மையான் மும்மதத்தனாதல்
யாங்ஙனமென்பார்க்கு, மும்மதம் யானைக்கு அடையென்பாரும், ஒரு
கோட்டன் முதலியனபோல மும்மதத்தனென விநாயகப்பிரானுக்கே
யடையாய் நிற்றலின் யானைக்கடையாமாறு யாங்ஙனமெனமறுத்து
இச்சாஞானக்கிரியைகள் ஈண்டு மும்மதமென உருவகஞ் செய்யப்
பட்டனவென்றுரைப்பாரும், ஒருகோடு முதலிய ஏனை யடையெல்
லாம் உறுப்பினையே புணர்த்தி நிற்றலின், இதுமாத்திரமினம்பற்றா
துருவகமாதல் செல்லாமையானும், உருவகஞ் செய்தற்குரியதோ
ரியைபு விசேடமின்மையானுங் கந்தன் முதலியோரையு மக்கருத்
துப்பற்றி மும்மதத்தனெனல் யாண்டுமின்மையானும், அதுவுமுரை
யன்றென மறுத்துப் பஞ்சாக்கரத்தின் பேதமாகிய எட்டெழுத்
தாறெழுத்து நாலெழுத்து முதலியனவும் பஞ்சாக்கரமென வழங்கப்படு
மாறுபோல மும்மதத்தின் வகையாகிய ஒருமதமுமிருமதங்களு மும்
மதமென வழங்கப்படுமாகலின், அதுபற்றி ஆசங்கை யென்னையென்
றொழிவாருமுளர். வாரணமுஞ் சிந்தையும் ஆகுபெயர். திருகு முத
னிலைப்பெயர். ஒகாரம் எதிர்மறை. இஃதெண்ணலங்காரம். ஈண்டு
*"இறைவனையு மிறைவனுலியம்புநூலு மீண்டளவும் பொருளியல்பும்
வேண்டுஞ் செய்தி - முறைமைகளும் பெத்தமொடு முத்தியெல்லாம்"
என்றெடுத்துக்கொண்ட முறையே வைத்துப் பரபக்கங்களை எடுத்
தோதி மறுத்தவாசிரியர், இனியம்முறையே சுபக்கங் கூறுகின்றார்.

*சித்தியார் பரபக்கம் - கக.

## பாயிரம்

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம். ௨

(உரை) புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்னும் நான்கனுள்
அகச்சமய மொழித்தொழிந்த முக்கூற்றுப்புறங்களிற் றனித்தனி யறு
வகைப்பட்ட சமயங்களினின்று கொண்டவற்றுள்ளும் பலவேறு
வகைப்பட வோர்த்துணர்கின்ற அவரவர்கொண்ட முதற்பொருளாய்,
அவரின்வேறாகிய பாடாணவாதமுதலிய அகச்சமயத்தார்க்கு இலயம்
போகமதிகாரமென்னும் மூன்றவத்தையின் முறையே சத்தியுமுத்தி
யோகமும் பிரவிருத்தியுமென்னுந் தொழில் வேறுபாடுபற்றிச் சிவன்
சதாசிவன் மகேசனென்னும் பெயருடைய அருவம் அருவுருவம்
உருவமென்னுந் தடத்தக்குறியே குறியாகவுடைத்தாய்ச், சித்தாந்த
சைவர்க்கு அத்தடத்தக்குறியேயன்றி வேதாகமங்களின் கருத்திற்
கதீதமாய், உயிர்க்குயிராய், உயிர்கட்கெல்லா மறிவைப் பிறப்பிக்கும்
அம்மையப்பனுமாகி, எங்கணு மெக்காலமுஞ் செறிந்து வியாபகமாய்
நின்ற சிவபிரான் திருவடியைச் சிரமேற் கொள்வாம்.

பரபக்கத்துட் புறப்புறச்சமயத்தாரையும் புறச்சமயத்தாரையும்
மறுப்பவே, அம்முறைபற்றி அகப்புறச்சமயத்தாரும் மறுக்கப்பட்
டாரேயாவரென்னுங் கருத்தான், அவரையுமுடன்றழுவ அறுவகைச்
சமயத்தெனப் பொதுப்படக் கூறினார். ஓர்த்தல் ஆராய்தல். விசே
டியமடியாகலின் உடைத்தாயென்றார். சிவனடியென்றது உபசாரம்.
இதனுள், அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாயெனவே
மேற்கூறிப்போந்த பரபக்கத்துப் பொருளும், வேறாங்குறியதுவுடைத்
தாயெனவே முதற்சூத்திர முதலியவைந்து சூத்திரத்திற் பெறப்படுந்
தடத்தப்பொருளும், வேதாகமங்களின் குறியிறந்தெனவே இரண்டு
மன்றி யேனைச்சொரூபலக்கணங் கூறும் ஆறாஞ் சூத்திரப்பொருளும்,
அறிவினிலெனவே ஆன்மசொரூபங் கூறுமேழாஞ் சூத்திரப்பொரு
ளும், அருளான் மன்னியெனவே ஞானதரிசனங் கூறுமெட்டாஞ்
சூத்திரப்பொருளும், அம்மையோடப்பனாகியெனவே ஞானமு

ஞேயமுஞாதிருவுமாகக் காணப்படு மொன்பதாஞ் சூத்திரப் பொருளும், செறிவொழியாது நின்றவெனவே ஏகனுகிநிற்றல் கூறும் பத்தாஞ் சூத்திரப்பொருளும், சிவனடிசென்னி வைப்பாமெனவே அரன் மலரடிக்கீழிருத்தல் கூறும் பதினொராஞ் சூத்திரப்பொருளும், சென்னிவைப்பாமென்னுஞ் சொல்லியல்பான் அணைந்தோர்தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரப் பொருளுங் குறிப்பானறியக் கிடந்தன. இங்ஙனந் தொகுத்துக் காட்டுதல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென வுணர்க. இனி, இதனுட் கூறப்படுமறுவகை வினையெச்சங்களானும் முதல்வனுடைய அறுவகைக் குணங்களுங் கூறப்பட்டனவென்றுரைத்தலுமொன்று. அது காட்டுதும் : அவ்வவர்பொருளாவென்றதனுல் அங்ஙனம் பல வேறுவகைப்பட நிற்கும் அநந்தசத்தியாகிய அளவிலாற்றலுடைமை கூறப்பட்டது; வேருங்குறியதுவுடைத்தாயென்றதனுல் அநாதிபோதமநாதிமுத்தத்தன்மையெனப் படும் இயல்பாகவே பாசங்களினீங்குதல் கூறப்பட்டது, நிராமயான்மாவெனப்படும் இயற்கையுணர்வினனுதலு மீண்டேயடங்கும்; வேதாகமங்களின் குறியிறந்தென்றதனுற் சுதந்திரனெனப்படுந் தன்வயத்தனுதல் கூறப்பட்டது; அறிவினிலருளான் மன்னியென்றதனுற் சருவஞ்ஞத்துவமெனப்படும் முற்றுமுணர்தல் கூறப்பட்டது; அம்மையோடப்பனுகி யென்றதனுல் அலுத்தசத்தியெனப்படும் பேரருளுடைமை கூறப்பட்டது, விசுத்ததேகமெனப்படுந் தூயவுடம்பினனுதலுமீண்டேயடங்கும்; செறிவொழியாதென்றதனுற் பூர்த்தியெனப் படும் வரம்பிலின்பமுடைமை கூறப்பட்டதென்றுணர்க. இன்னும் விரிப்பிற் பெருகும். ௧

என்னைஇப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி ஞேலே தாளிணை தலைமேற் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டான்நூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்ரும்.

**(உரை)** பவமாயக்கடலிலழுந்துகின்றவென்னை அதன்கணழுந்தாதவண்ணங் கருணைக்கையாலெடுத்து என்னறிவின்கண்ணே தற் **சொரூ**பத்தை விளக்குதற் கெழுந்தருளிவந்து திருவடி சென்னியிற் சூட்டித்தீக்கைசெய்தருளிய வெண்ணெய்மெய்கண்டதேவன் மொழிபெயர்த்துரைத்தருளிச்செய்த சிவஞானபோதநூலை, ஏனையாசிரி



யன்மார் செய்த பிரமாண நூல்கட்கெல்லாஞ் சிரத்தானமாகக் கொண்டு, அதனிற்கூறப்படுஞ் சைவாகமப் பொருட்கூற்றை விளக்குவாம்.

இந்நூலுக்கு வழிகூறியவாறு. எடுத்தென்றது குறிப்புருவகம். வைத்தென்றது உபசாரவழக்கு; *"அன்போடியைந்த வழக்கு" என்ருற்போல. சென்னியின் இன் உவமவுருபு. ௨

பண்டைநற் றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன் மார்க்கர்
கண்டநூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரிகத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்ரும். ௪

**(உரை)** சாமுசித்தர் வைநயிகர் பிராகிருதரென்னுமிவருள், ஆற்றலுமறிவுங்காதலுமில்லாத பிராகிருதரையொழித்து, ஒழிந்தவிருவரின் முற்செய் தவவிசேடத்தாற் சாமுசித்தராய்ப் பிறந்து வீடு காதலிக்குஞ் சிவபத்தரை விஞ்ஞானகலர் பிரளயாகலரைப்போல நூல்வழியானன்றித் தானே சிவகதியிற் சேர்த்துவனுகலின் அவர்க்கு நூல் வேண்டாமையான், முறைமையின் மந்தரமுதலிய சத்திநிபாதமுடையவராய் நூல்வழியான் முத்தி பெற விரும்பும் வைநயிகராயினுர்க்குச் சிவகதி கூடுமுறையினை ஈண்டு வகுத்துக் கூறுகின்ரும்.

சன்மார்க்கரை மார்க்கரென்றது தலைக்குறை. சன்மார்க்கராவார் ஞானிகள். கண்டநூல் அவர்களெல்லாம் பிரமாணமென்றறிந்து கைக்கொண்டநூல். இதனுனே நுதலியபொருளுங் கேட்போரும் பயனுங் கூறியவாறு. ௩

மறையினுன் அயனுன் மாலான் மனத்தினுன் வாக்கான் மற்றும்
குறைவிலா அளவி னுனுங் கூறொணு தாகி நின்ற
இறைவனுர் கமல பாதம் இன்றியான் இயம்பும் ஆசை
நிறையினுர் குணத்தோர்க் கெல்லாம் நகையினை நிறுத்து மன்றே.

**(உரை)** வேதமுதலியவற்ருனு மறிதற்கரிய முதல்வனதியல்பை யான் சொல்லுவலென்றெழுந்த எனது புல்லியவாசை, சால்புடையாரெல்லாம் ஏயெயிஃதோவிவ னறிவென்றெள்ளி நகையாடுதற்கேதுவாம்.

---

* திருக்குறள் - அன்புடை

187113

அயனுன் மாலான் மனத்தினுன் வாக்கானென்புழி, ஆனுருபு முன்னையவிரண்டும் வினைமுதற்பொருண்மையினும், பின்னையவிரண்டும் கருவிப் பொருண்மையினும் வந்தன: சாத்தானுற்கண்ணுனேக்கப் பட்டதென்ருற்போல. ஈண்டளவென்றது அனுமானப் பிரமாணத்தை. அயன்மாலென்றது உபலக்கணம், கூறுெருனதென்றது உபசாரம். இனி, அயனென்றது அவ்வேதத்திற்கங்கமாய் அயனுற் செய்யப்பட்ட பதினெண் புராணநூலையும், மாலென்றது மாயோனவதாரமாகிய வியாதனுற் செய்யப்பட்ட இதிகாசநூலையும், மனமென்றது மனுமுதலிய இருடிகளான் மனத்தானினைந்து செய்யப் பட்ட மிருதிநூலையும், வாக்கென்றது அவ்வேதத்தைக் கருமகாண்டம் ஞானகாண்டமென் றிருவகைப்படுத்தெடுத்துக் கொண்டு அதன் பொருளை நிச்சயித்துரைக்கும் சாத்திரமாகிய பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சைகளையும், அளவென்றது அளவைநூலாகிய தர்க்கசாத்திரத்தையும், ஆகுபெயரானுணர்த்தினவெனக்கொண்டு, வேதத்தானுமதற்கங்கமான புராணமிதிகாச மிருதி மீமாஞ்சை தருக்கங்களானுங் கூறுெருனத பாதமென்றுரைத்தலுமொன்று. அவையடக்கங் கூறியவாறு. ௪

அருளினுல் ஆக மத்தே அறியலாம் அளவி னுலும்
தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலா மிரிக்க லாகும் அடியரோ டிருக்க லாமே. ௬

**(உரை)** இறைவனியல்பு அப்பெற்றித்தாயினும், அவனை அவ் விறைவனூலெனப்படும் வேதசாரமாகிய சிவாகமத்தி னனுபவமுடைய தேசிகாருளிச்செய்யும் உபதேசத்தாற் கேட்டறியலாம்; கேட்டதனை அதற்கனுகூலமானவளவையாற் சிந்தித்துமறியலாம்; சிந்தித்ததனைத் தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான் மாசறத் தெளிந்துமறியலாம்; அதனுற் பாசக்ஷயம்பண்ணி நிட்டைகூடிச் சிவானந்தானுபூதியும் பெறலாம்.

உம்மை எண்ணின்கண் வந்தது. மேல் அவையடக்கத்துட் கூறியதுபற்றி நிகழுமாசங்கையை நீக்கிற்று. இக்கடவுள்வணக்க முதலாயினவெல்லாம் பரபக்கத்து நூன்முகத்தாற் கூறிப் போந்தனவேயாயினும், பரபக்கஞ் சுபக்கமெனவிதனை இருநூலாதலுங் கொள்ள



வைத்தமையின் ஈண்டும் வேறு கூறினுர். அறுவகைச்சமயத்தென்னு முதற்செய்யுளிற் கடவுள்வணக்கங் கூறுமுகத்தாற் சுபக்கத்தினிறைவனுவானிவனென்பதூஉம், ஏனை நான்குசெய்யுளினும் வழிமுதலியன கூறுமுகத்தான் அவ்விறைவனுலியம்பப்படும் நூலிவையென்பதூஉம், அவற்றுட் பொதுநூல் சிறப்புநூலென்னும் வேறுபாடு முணர்த்தப் பட்டன. ௫

---

## அளவை

இனி, *நிறுத்தமுறையானே பொருளுண்மைக்களவு கூறுவான் ெருடங்கி, அவ்வளவையினியல்புணர்ந்தார்க்கன்றி அதனையெடுத்துக்காட்டலாகாமையின், முதற்கண் அளவையினியல்பு பதினுன்கு செய்யுளாற் கூறுகின்ருர்.

அளவை காண்டல் கருதல்உரை அபாவம் பொருளொப் பாறென்பர், அளவை மேலும் ஒழிபுண்மை ஐதிகத்தோ டியல் பெனநான்(கு), அளவை காண்பர் அவையிற் றின் மேலு மறைவர் அவையெல்லாம், அளவை காண்டல் கருதல்உரை என்றிம் மூன்றின் அடங்கிடுமே. ௭

**(உரை)** பிரமாணமாவது காட்சிமுதல் அறுவகைப்படுமென்பாரும், அவ்வறுவகைப் பிராமணங்கட்குமேலும் பாரிசேடமுதலிய நான்கு பிரமாணமுளவென்பாரும், அப்பத்துக்குமேலும் பிரமாணங்களுளவென்பாருமுளர். அவையெல்லாம் பிரமாணமேயாயினுங் காட்சிமுதலிய மூன்றனுளடங்குவனவன்றி வேருவனவல்ல.

இம்முறைபற்றி ஆகமமுமனுமானத்திலடங்குமெனப் புத்தர் முதலாயினுர் கூறுப. அஃததனுளடங்காதென்பது †"நூலுரைத் தாெனுருவனுளன்" என்னும் பரபக்கத்துச் செய்யுளானுணர்க. இது சொற்பொருட் பின்வருநிலை. இதனுனே பிரமாணமினைத்தென்பது கூறப்பட்டது. ௧

மாசறு காட்சி ஐயந் திரிவின்றி விகற்ப முன்னு
ஆசற அறிவ தாகும் அனுமானம் அவினு பாவம்

---

* சித்தியார் பரக்கம் ௧௧. † ஷை ௧௦௬.

பேசுறு மேதுக் கொண்டு மறைபொருள் பெறுவ தாகும்
காசறு முரையிம் மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும்.

**(உரை)** அம்மூன்றனுள், நிருவிகற்பவுணர்வைத் தனக்கு முன்னாகக்கொண்டு ஐயவுணர்வும் விபரீதவுணர்வுமின்றி விடயங்களை நேரே யறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி காட்சியளவையெனப்படும். அங்ஙனம் நேரேயறியப்படுவதன்றிச் சாதித்துப் பெறற்பாலதாய் மறைந்து நின்ற பொருளை அதனை விட்டுநீங்காது யாண்டுமுடனாய் நிகழுமேதுவைக்கொண்டு அவ்வாறுணர்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி கருதலளவையெனப்படும். இவ்விரண்டானுமறியப்படாத பொருள்களை ஆத்தவாக்கியங்கொண்டு அவ்வாறுணரச் செய்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி உரையளவையெனப்படும்.

அடங்கிடாப்பொருள் பரலோக பாதாளலோகமுதலாயின. இம்மானத் தடங்கிடும் பொருளையும் ஆத்தவாக்கியங்கொண்டறிவது அருத்தவாதம். ஐயந்திரிவின்றி விகற்பமுன்னுவென்பதனை யாண்டுங் கூட்டி யுரைத்துக்கொள்க. விகற்பமென்றது தலைக்குறை. இதனானே அம்மூன்றற்கும் இலக்கணங் கூறப்பட்டது. ௨

கண்ட பொருளை இரட்டுறவே கருதல் ஐயம் திரியவே,
கொண்டல் திரிவாம் பெயர்ச்சாதி குணமே கன்மம் பொருளெனஐந், துண்ட விகற்ப உணர்வினுக்குப் பொருளினுண்மை மாத்திரத்தின், விண்ட வில்லா அறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே. ௯

**(உரை)** மேற்கூறிப்போந்த நிருவிகற்பமுதலிய நான்கனுள், பெயர் முதலியவற்றாற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றாநின்றதெனப் பொருளுண்மை மாத்திரையேயறியும் ஞானசத்தி நிருவிகற்பமெனப்படும். அங்ஙனமறிந்த பொருளை இஃதியாதோவென ஒன்றிற்றுணிவு பிறவாதாராயும் ஞானசத்தி ஐயமெனப்படும். அதனை அதனோடொப்புமையுடைய வேறுபொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஞானசத்தி திரிவெனப்படும். பெயர்முதலியவைந்தும் பொருடோறுமுண்மையின் அவ்வைந்தும் அப்பொருட்கண்ணுள்ளவாறினிது விளங்கவுணரும் ஞானசத்தி சவிகற்பமெனப்படும்.



முன்கண்ட வாதனைபற்றித் தோற்றுவதாகிய நினைவுணர்வு இவ்விடத்துக் கண்ட பொருளின்கணிகழ்வதன்மையின், அதனை ஈண்டெடுத்தோதி விலக்காராயினர். இதனானே காட்சிமுதலிய மூன்றினுஞ் சேறற்குரிய நிருவிகற்பமுதலிய நான்கினிலக்கணங் கூறப்பட்டது. ௫

காண்டல் வாயில் மனம்தன்வே தனையோ(டு) யோகக்
காட்சியென,ஈண்டு நான்காம் அனுமானம் தனக்கும்பிறர்க்குமென்றி ரண்டாம், மாண்ட உரைதந் திரமந்தி ரத்தோடுபதேசச்சொல் லெனமூன்றும், பூண்ட அளவைக் கெதிர்புலன்தன் னியல்பு பொதுவென் றிரண்டாமே. ௧௦

**(உரை)** அம்மூன்றனுள், காட்சியளவை வாயிற்காட்சி முதல் நான்கு வகைப்படும்; கருதலளவை தன்பொருட்டுப் பிறர்பொருட்டென இருவகைப்படும்; உரையளவை தந்திரகலை முதன் மூவகைப்படும். இப்பிரமாணங்களானறியப்படும் பிரமேயங்களதியல்பு சிறப்பியல்பு பொது வியல்பென இருவகைப்படும்.

இதனானே, காட்சிமுதலிய மூன்றும் படும் பாகுபாடும், அவற்றானளக்கப்படும் பொருள்களின் பாகுபாடும், தொகுத்துக் கூறப்பட்டன.

அன்னிய சாதி யும்தன் சாதியும் அகன்று நிற்றல்
தன்னியல் பன்னி யத்தைத் தவிர்ந்துதன் சாதிக் கொத்தல்
துன்னிய பொதுஇயற்கை சொன்னஇவ் விரண்டி னுள்ளே
மன்னிய பொருள்க ளியாவும் அடங்கிடு மானமுற்றால். ௧௧

**(உரை)** சிறப்பியல்பு பொதுவியல்பென்ற இரண்டனுள், ஒருபொருட்கு வேற்றுச்சாதிப்பொருளினுந் தன்சாதிப்பொருளினுஞ் செல்லாது தனக்கு மாத்திரையேயுரித்தாய் நிலைபெறுந்தன்மை சிறப்பியல்பெனவும், வேற்றுச்சாதிப்பொருண்மாத்திரையிற் செல்லாது தன்சாதிப் பொருட்கெல்லாம் ஒப்பநிலைபெறுந்தன்மை பொதுவியல்பெனவுங் கூறப்படும். காட்சிமுதலிய பிரமாணங்களாற் பிரமேயப்பொருள்களை யறியலுறுமிடத்து அவையெல்லாம் இவ்விரண்டியல்பினுளொன்றுபற்றி அறியப்படும்.

எனவே, இவ்விரண்டின் வேறாகிய வேற்றியல்புபற்றி அறியப் படுமாயின், அவ்வறிவு பிராமாணியமன்றாய்ப் போமென்பதாயிற்று. பிரமேயத்தையறிந்தவறிவே தான் பிராமாணிய மென்பதனையு மறியு மெனவும், தான் பிராமாணியமாகாதவழி அவ்வாகாமைமாத்திரையே பிறிதொன்றானறியப் படுமெனவும், இவ்வாறன்றித் தனதுபிராமாணியம் பிறிதொன்றானறியப் படுவதேயென்னுந் தார்க்கிகர் முதலியோர் மதம் அடாதெனவுங் கொள்க. இவற்றை வடநூலார் சுதத்துவம் பரதத்துவமென வழங்குப. சாதியாவது ஒரு நிகரனவாகிய பல பொருட்குப் பொதுவாவதோர் தன்மை. இதனானே, மேற்றன்னியல்பு பொதுவியல்பென்றவற்றி னிலக்கணங் கூறப்பட்டது. இச்செய்யுள் சூசிகடாகநயம்பற்றி முன் வைத்தவாறு. ௫

உயிரினோ டுணர்வு வாயில் ஒளியுரு வாதி பற்றிச்
செயிரொடு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக் காட்சி
அயர்விலிந் திரிய ஞானம் ஐம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞானம் மானதக் காண்ட லாமே. ௧௨

(உரை) மேற்கூறிப்போந்த காட்சி நான்கனுள்ளும், தன்னை நோக்கிநிற்கு மறிவாகிய ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கி யோடு மறிவாகிய சிற்சத்தி, கண்முதலிய பொறிகளையும், அவற்றிற்குத் துணையாய் வலிசெய்துடனிற்குந் தேயுமுதலிய பூதங்களையும், அப்பூதங்களுக்கு முதற்காரணமாய் அவற்றைவிட்டு நீங்குதலின்றி உடனாய உருவமுதலிய தன்மாத்திரைகளையும் அதிட்டித்துக் கொண்டு, ஐயவிபரீதக் குற்றங்களும் பெயர்சாதி முதலிய விகற்பமு மின்றி, உருவமுதலிய வைம்புலன்களை நிருவிகற்பமாயறியுமறிவு வாயிற்காட்சியெனப்படும்; அங்ஙனமைம்புலன்களை இயைந்தறிந்த பின்னர் மீளமறத்தலின்றிச் சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலைபெறு வதாகிய அவ்வாயிற்காட்சியறிவு, பெயர்சாதி முதலியவற்றான் விபரீதமாதலின்றி நிச்சயமாய்ப் புத்திதத்துவத்தின்கண் வருதலானாகிய சவிகற்பவுணர்வாய் உயிரினோடுணர்வு தெரிவது மானதக்காட்சி யெனப்படும்.

ஐம்புலன் சார்ந்தயர்வி லிந்திரிய ஞானமென மாறுக. இன் ஐந்தாமுருபு. ஓடுணர்வு வினைத்தொகை. ஒளி ஆகுபெயர். ஆதி



யென்பதனை ஒளியோடுங் கூட்டுக. சார்ந்தபினென்பது சார்ந்தெனத் திரிந்து காரியத்தின்மேனின்றது. உயிர்க்குப் பற்றுக்கோடாகிய புத்தியை உயிரென்றுபசரித்தார். வந்தஞானமென்னும் பெயரெச்சம் ஆறுசென்றவெயரென்றாற்போல நின்றது. மனத்தின்றொழிற்பாடு முன்னாக நிகழ்தலின் மானதக்காட்சி யெனப்பட்டது. அதிகாரமுறைமையென்னுமுத்தியான் உயிரினோடுணர்வு தெரிவதென் பதனை அளவையதிகாரமுழுதினு முய்த்துரைக்க. ௬

அருந்தின்பத் துன்பம் உள்ளத் தறிவினுக் கராக மாதி
தரும்தன்வே தனையாங் காட்சி சமாதியான் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால இயல்பகல் பொருள்க ளெல்லாம்
இருந்துணர் கின்ற ஞான மியோகநற் காண்ட லாமே. ௧௩

(உரை) அம்மானதக்காட்சி விசேடம்பற்றி மேம்பட்டு நிகழுஞ் சத்துவகுண முதலியவற்றின் விளக்கமாகிய இன்பதுன்பங்கள் புருடனதறிவிற்கு விடயமாம்படி அராகமுதலியவைந்து தத்துவங்களானும் புணர்க்கப்படுமதனை உயிரினோடுணர்வு தெரிவது தன்வேதனைக் காட்சியெனப்படும்; இவ்வாறன்றி அறிவைத் தடைசெய்து நின்ற மலசத்திகளை இயமநியமமுதலிய அட்டாங்கயோகசமாதியான் ஒருவாறு கெடுத்து ஓரிடத்தொருகாலத் திருந்தாங்கிருந்து மூவிடத்து முக்காலத்துப் பொருள்களையுங் காண்கின்ற காட்சியாய் உயிரினோடுணர்வு தெரிவது யோகக்காட்சியெனப்படும்.

இவையிரண்டு செய்யுளானும் மேலெடுத்துக்கொண்ட நால்வகைக் காட்சிகளதியல்பு கூறப்பட்டது. ௭

பக்க மூன்றின் மூன்றேது வுடைய பொருளைப் பார்த்
துணரத், தக்க ஞானந் தன்பொருட்டாம் பிறர்தம் பொருட்
டாம் அனுமானம், தொக்க இவற்றாற் பிறர்தெளியச் சொல்ல
லாகும் அச்சொல்லும், மிக்க வந்நு வயத்தினோடு வெதிரே
கச்சொல் லெனஇரண்டாம். ௧௪

(உரை) இயல்பு முதலிய மூன்றனுள் ஓரேதுவுடைய சாத்தியத்தைப் பக்கமுதலிய மூன்றின் வைத்து அவினாபாவம்பற்றி ஆராய்தற்குரிய ஞானமாய் உயிரினோடுணர்வு தெரிவது தன்பொருட்டனுமானமாம்; அவ்வேதுக்களானே தானறிந்ததனைப் பிறரறியப்

போதித்தலை உயிரிஞேடுணர்வு தெரிவது பிறர்பொருட்டனுமான மாம். அங்ஙனம் பிறரறியப் போதிக்குஞ் சொல்லும் உடம்பாடு மறையென்று இருவகைப்படும்.

இதனுனே மேலெடுத்துக்கொண்ட இருவகையனுமானங்களை தியல்பு கூறப்பட்டது. அ

மூன்று பக்கம் பக்கம்நிகர் பக்கம் நிகரில் பக்கமெனத்,
தோன்றும் பக்கந் துணிபொருளுக் கிடமாம்உவமை நிகர்
பக்கம், ஆன்ற பொருள்சென் றடையாத விடமா நிகரில்
பக்கமுதல், என்ற இரண்டும் பொருளுண்மைக் கிடமாம்
ஒன்று பொருளின்றாம். கரு

(உரை) பக்கம் மூன்றாவன : பக்கஞ் சபக்கம் விபக்கமென்பன வாம். அவற்றுள், ஐயுற்றுத் துணியற்பாலதாய பொருளிருக்குமிடம் பக்கமெனப்படும்; அதற்கெடுத்துக் காட்டப்படுவதாய்த் துணியப் பட்ட பொருளிருக்குமிடம் சபக்கமெனப்படும்; அப்பொருளில்லாத விடம் விபக்கமெனப்படும். இம்மூன்றனுட் பக்கஞ்சபக்கமிரண்டும் பொருளுண்டென அறிதற்கிடமாம்; விபக்கம் அஃதில்லையென் றறிதற்கிடமாம்.

துணிபொருள் எதிர்காலவினைத்தொகை. அவினுபாவமறிதற் கண் ஐயமறுத்தற்பொருட்டுச் சபக்கம் விபக்கமிரண்டும் வேண்டப் படுமென்பார், முதலேன்ற விரண்டும் பொருளுண்மைக்கிடமா மொன்று பொருளின்றாமெனவுங் கூறினுர். இதனுனே மேற்பக்க மூன்றென்றவற்றின் பெயருமியல்புங் கூறப்பட்டன. கூ

ஏது மூன்றும் இயல்புகா ரியத்தோ டநுப லத்தி
யிவை, ஓதி னியல்பு மாமரத்தைக் காட்டல் உறுகா ரியம்
புகைதன், ஆதி யாய அனல்காட்ட லாகும் அநுப லத்தி
யது, சீத மின்மை பனியின்மை காட்டல் போலுஞ் செப்பி
டிலே. ககூ

(உரை) மேலெடுத்துக்கொண்ட மூன்றேதுவாவன இயல்புங் காரியமும் அநுபலத்தியுமாம். அவற்றுள், மா முதலிய சொற்கள் மாமுதலிய பொருளையுணர்த்துதற்கண் வேறு காரணமின்றி அச் சொற்களினியல்பானுளதாகிய ஆற்றல் சகசவேதுவெனப்படும்; புகை



முதலிய காரியங்கள் நெருப்புமுதலிய தத்தங் காரணங்களை யுணர்த் துதற்கண் அவை காரிய ஏதுவெனப்படும்; குளிரில்லாமை முதலிய காரியாபாவங்கள் பனியில்லாமை முதலியகாரணுபாவங்களை உணர்த்து தற்கண்ணும் பனியில்லாமை முதலிய காரணுபாவங்கள் குளிர் வாராமை முதலிய காரியாபாவங்களை யுணர்த்துதற்கண்ணும், அவை அநுபலத்தி ஏதுவெனப்படும்.

இங்ஙனம் உணர்ச்சி மூவகைப்படுதலின் ஏதுவும் மூவகைப்பட் டன. காரிய ஏதுக்கூறவே, ஒற்றுமைபற்றிக் காரண ஏதுவுங் கொள் ளப்படும். அஃதாவது, இடித்து மின்னி இருண்டெழுந்த மேகம் மழைபெய்தலைக் காட்டுதல் போல்வது. சீதமின்மை பனியின்மை காட்டலென்பது *“ வாளைமீனுள்ளறலைப்படல் ” என்றாற்போல நின்றது. போலும் அசை. இதனுனே ஏது மூன்றென்றவற்றின் பெயரும் இயல்புங் கூறப்பட்டன. கo

புகையால் அனலுண் டடுக்களைபோ லென்னப் புகறல்
அந்நுவயம், வகையாம் அனலி லாவிடத்துப் புகையின் றாகும்
மலரினெடு, முகையார் நீரிற் போலென்று மொழிதல்
வெதிரே கச்சொல்இவை, தொகையார் உறுப்பைந் தொடுங்
கூடச் சொல்லு வாரு முளர்துணிந்தே. கள

(உரை) மேலெடுத்துக்கொண்ட சொல்லிரண்டனுள், புகை யுள்ளவிடத்தனலுண்டென உடம்பாடுபற்றி அட்டிலை உவமைகூறுஞ் சொல் அந்நுவயச்சொல்லாம்; நெருப்பில்லாதவிடத்துப் புகையில்லை யென மறுதலைபற்றித் தாமரையோடையை உவமைகூறுஞ் சொல் வெதிரேகச் சொல்லாம். இவ்விருவகைச் சொற்களையும் மேற் கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டும் உபநயமும் நிகமனமுமென்னும் ஐவகையுறுப்புக்களான் இணங்கவைத்துத் தெளியக் கூறுவாருமுளர். அவ்வாறு சொல்லுவர் தார்க்கிகர் முதலியோர். இதனுனே சொல்லிரண்டென்றவற்றின் இயல்பு கூறப்பட்டது. கக

போது நாற்றத் தால்அறிதல் பூர்வக் காட்சி அனுமானம்
ஓது முறையா லறிவின்அள வுணர்தல் கருதல் அனுமானம்

* திரிகடுகம் - எ.

நீதி யான்முற் கன்மபல நிகழ்வ திப்போ திச்செய்தி
ஆதி யாக வரும்பயனென் றறிதல் உரையால் அனுமானம்.

**(உரை)** நாற்றமுதலிய எதுபற்றிப் போது முதலிய காட்சிப்புலனாதற்குரியபொருளை உயிரினோடுணர்வு தெரிவதெல்லாம் பூருவக்காட்சியனுமானமெனப்படும். உரை முதலிய எதுபற்றி அறிவினளவு முதலிய கருத்துப் புலனாதற்குரிய பொருள்களைத் தன் குறிப்போடு சார்த்தி உயிரினோடுணர்வு தெரிவதெல்லாம் கருதலனுமானமெனப்படும். இவ்விரண்டினும் வேறாய் இதமகிதங்கண் முன்னர் அச்செயலானு லிங்குமவைசெயின் மேலைக்காகும் என்றாற்போல, வேதாகமங்களுட் சொல்லியதுகொண்டு சொல்லாத பொருளையும் ஒப்புமைபற்றி யூகித்துத் துணிவதாய் உயிரினோடுணர்வு தெரிவதெல்லாம் உரையனுமானமெனப்படும்.

ஆகமத்துட் கூறும் பதி முதலிய பொருள்களை அவ்வாகமத்திற்கியைபுடைய அனுமானத்தின் வைத்தறிவதூஉம் உரையனுமானமெனப்படும் என்பாருமுளர். இதனானே அவையிற்றின்மேலு மறைவர் எனப்பட்ட அளவைகள் காட்சியனுமானத்தோடொப்ப வைத்து அனுமானத்துளடக்கிக் காட்டப்பட்டன. ௧௨

அநாதியே அமல னாய அறிவன்நூல் ஆக மந்தான்
பின்ஆதிமா றின்றிப் பேணல் தந்திர மந்தி ரங்கள்
மனுதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகும்
தனுதிஈ றிலாதான் தன்மை யுணர்த்துதல் உபதே சந்தான்.

**(உரை)** அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச்செய்த வேதாகமங்கள் கருமகாண்டம் உபாசனாகாண்டம் ஞானகாண்டமென மூவகைப்படும். அவற்றுள், கருமகாண்டம்பற்றிப் பின்னொடு முன் மாறுகோளின்றி அனுட்டித்தலை உயிரினொடுணர்வு தெரிவது தந்திர வுரையளவை யெனப்படும்; உபாசனாகாண்டம்பற்றி மனுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையை உயிரினோடுணர்வு தெரிவது மந்திரவுரையளவை யெனப்படும்; ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலு முடிவுமில்லாத இறைவன் தன்னின் வேறல்லாத எண்குணமுடையனாதல் தன்னின் வேறாகிய பசுபாசங்களை யுடையனாதல் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்து



மாறும் உயிரினோடுணர்வு தெரிவது உபதேச உரையளவையெனப்படும்.

வேதமும் ஆகமமெனப்படுமென்பது *சீகண்டபாடியத்துள்ளுங் காண்க. ஆத்தவாக்கிய மென்ப துணர்த்துதற்கு அநாதியே அமலனாய் அறிவனென்றார். அறிவனூலென்புழி ஆறாவது செய்யுட் கிழமைக்கண் வந்தது. இவ்வாறன்றி, பதிபசுபாசங்களுக்குப் பிரமாணமும் இலக்கணமும் பின்முன் மாறுகோளின்றிப் பாதுகாத்துக் கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது தந்திரவுரை யெனவும், மனுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யெனப்படுஞ் சாதனமாகிய வேண்டுஞ்செய்தி முறைமைகளைக் கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது மந்திர வுரையெனவும், தனுதியீறிலாதான்தன்மை யுணர்த்துதலெனப்படும் நிட்டையினியல்பு கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது உபதேசவுரையெனவும், இவ்வாறு ஞானகாண்டமொன்றனையே மூவகைப்படுத்துரைப்பாருமுளர். அவர்க்கு மற்றை உபாசனாகாண்டமுங் கன்மகாண்டமும் பிரமாணத்துளகப்படாமை யறிக. இனித் தார்க்கிகர் முதலியோர் குடம் படம் முதலிய உலகச் சொற்கள்பற்றி அவ்வப் பொருள்களை யுணர்தலும் உரையளவை யென்பர். அவை, காட்சியனுமானங்களின் அடங்கிடாப் பொருளைக் காட்டுவன வன்மையின், மாமரத்தைக் காட்டல்போலும் இயல்பேதுபற்றி யறிவதாகிய அனுமான விசேடமாவனவன்றி உரையளவையாதற்கேலாமை யறிக. சொல்லானறிந்தேன் என்றனுபவ நிகழ்தலின் அது வேறளவையாவதன்றி அனுமானத்துள் அடங்காதென்பார்க்கு, குளிரின்மை பனியின்மை முதலியன அநுபலத்தியால் அறிந்தேனென்று அநுபவ நிகழ்தலின், இன்னோரன்னவற்றை வேறு பிரமாண மென்னாது காட்சி முதலியவற்றுள் அடக்குதல் பொருந்தாதாய் முடியுமென்றொழிக. இதனானே உரையளவை மூன்றென்றவற்றதியல்பு கூறப்பட்டது. ௧௩

ஈண்டு பக்கப் போலிநான் கேதுப் போலி யொருமூன்றாய், வேண்டும் எழுமூன் றாகும்விளங் குவமைப் போலியீரொன்பான், காண்டுந் தோல்வித் தானம்இரண் டிருபத்

* சீகண்ட பாடியம் - ௨. ௨. ௩௮.

திரண்டாம் கருதிலிவை, யாண்டு மொழிவர் அவையெல்லாம்
அளக்கில் அறுபத் தைந்தாகும். ௨௰

(உரை) மேற்கூறிப்போந்த அனுமான சாமக்கிரியைகளுள் துணி
பொருட்கிடனுதலாகிய பக்கலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒரு
புடையொத்துப் பக்கம்போலத் தோன்றுவதாகிய பக்கப்போலி, துணி
யும்பொருட்கு இடனாகாததூஉம், துணியும்பொருட் கொருமருங்கு
இடனாகாததூஉம், துணிந்த பொருட்கு இடனாவதூஉம், துணிந்த
பொருட்கொருமருங்குஇடனாவதூஉமென நான்குவகைப்படும். சாத்தி
யப் பொருளோடு வியாத்தியுடைத்தாய்ப் பக்கத்திலிருத்தலாகிய
ஏதுவிலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒருபுடையொத்து ஏதுப்
போலத் தோன்றுவதாகிய ஏதுப்போலி, துணியப்படாததூஉம் மறு
தலைக்கட்படுவதூஉம் ஒருதலைப்படாததூஉமென மூவகைப்பட்டு,
விரியான் இருபத்தொன்றாம். அவையாவன:—சார்பில்லதூஉம் சார்
புண்மை யறியப்படாததூஉமெனச் சார்புபற்றிய குற்றமிரண்டும்,
சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மை யறியப்படாததூஉம் சொரூ
பத்தின் விசேடணமில்லதூஉம் விசேடணமுண்மை யறியப்படா
ததூஉம் விசேடியமில்லாததூஉம் விசேடியமுண்மை யறியப்படாத
தூஉம் ஒருமருங்கில்லதூஉம் ஒருமருங் குண்மையறியப் படாததூஉம்
பானுக் குடம்பாடில்லதூஉமெனச் சொரூபம் பற்றிய குற்றமொன்
பதும், சாத்தியத்தோடு வியாத்தியுண்மை யறியப்படாததூஉம்
செயற்கைபற்றி வியாத்தியுடையதூஉமென வியாத்தி பற்றிய குற்ற
மிரண்டும் ஆகிய பக்கவிருத்தி துணியப்படாத ஏதுப்போலியின் விரி
பதின்மூன்றும், மறுதலைப்பொருள் சாதிப்பதூஉம் மறுதலைப்
பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோரேதுவை உடன்கொண்டு வருவ
தூஉம் காட்சியளவையான் மறுக்கப்பட்டுக் கொண்டுவருவதூஉம்
கருத்தளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டுவருவதூஉம் உரையள
வையான் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவதூஉமென மறுதலைத் தலை
யுடைய ஏதுப்போலி விரி யைந்தும், பக்க சபக்க மாத்திரையினன்றி
விபக்கத்துஞ் சேறலுடையதூஉம் சபக்கத்திற் சேறலின்றிப் பக்க
மாத்திரையினுள்ளதூஉம் சபக்க விபக்கங்கள் கிடைக்கப் பெறாதது
உமென ஒருதலைப்படாத ஏதுப்போலி விரி மூன்றுமாம். இனி
வியாத்தி நிச்சயித்தற் கிடனுதலாகிய உவமையிலக்கண மின்றியும்



உவமைபோலத் தோன்றுவதாகிய உவமைப்போலி, அந்நுவயம் பற்
றியும் வெதிரேகம்பற்றியும் இருவகைப்பட்டு, விரியானேரோ
வொன்றொன்பதாய்ப் பதினெட்டு வகைப்படும். அவையாவன:—
சாத்திய முடைத்தாகாததூஉம் சாத்தியமுடைமை நிச்சயிக்கப்படா
ததூஉம் ஏதுவுடைத்தாகாததூஉம் ஏதுவுடைமை நிச்சயிக்கப்படா
ததூஉம் இரண்டுமுடைத்தாகாததூஉம் இரண்டுமுடைமை நிச்சயிக்
கப்படாததூஉம் சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மை பானுக் குடம்
பாடாகாததூஉம் செயற்கையானாகிய வியாத்தியுடையதூஉமென
அந்நுவய வுவமைப்போலி விரி ஒன்பதும், சாத்தியமின்மையுடைத்
தாகாததூஉம் சாத்திய மின்மையுடைத் தென்பது நிச்சயிக்கப்படா
ததூஉம் ஏதுவின்மை யுடைத்தாகாததூஉம் ஏதுவின்மையுடைத்
தென்பது நிச்சயிக்கப்படாததூஉம் இரண்டின்மையும் உடைத்தாகாத
தூஉம் இரண்டின்மையும் உடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம்
சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மை பானுக் குடம்பாடாகாதது
உம் வெதிரேக வியாத்தி செயற்கையானுடையதூஉமென வெதிரேக
வுவமைப் போலி விரி யொன்பதுமாம். இனித் தருக்கவாதத்தின்கட்
பேசத் தெரியாமையாகிய தோல்வித்தானம், மயங்கப்பேசுதலும்
வாளாவிருத்தலுமென் றிருவகைப்பட்டு, விரியான் இருபத்திரண்
டாம்; அவையாவன:—தானெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்க
மாட்டாமல் அதற்குக் கேடுவரப் பேசுதலும், பிறிதொரு மேற்
கோளைக் கூறுதலும், மேற்கோளுக்கு மறுதலைப்படப் பேசுதலும்,
மேற்கோளை விட்டுவிடுதலும், தான்கூறிய ஏதுவுக்குக் குற்றம் வந்
துழி வேறோராற்றான் ஏதுக் கூறுதலும், தனக்கு வருந் தோல்
வியைப் பிறிதொன்று பேசி மறைத்தலும், பயனொடுபடாதன பேசு
தலும், பொருள் இனிது விளங்காத சொற்களை யெடுத்துக்கொண்டு
பேசுதலும், அவாய்நிலை தகுதி யண்மை யில்லனவாய்ப் பேசுதலும்,
மேற்கோண் முதலிய வைந்தினையும் முறை பிறழப் பேசுதலும்,
அவற்றுட் சில குறையப் பேசுதலும், ஒன்றற்குப் பல கூறுதலும்,
சொல்லை இரட்டித்துச் சொல்லுதலும், பொருளை யிரட்டித்துச்
சொல்லுதலும், பிறன்கூறிய பொருளை அநுவதிக்க மாட்டாமையும்,
பிறன்கூறிய பொருளையறிந்தும் அறியான்போன்று வினாதலும்,
விடைசொல்லத் தெரியாது வேறொரு கருத்துடையன் போன்றி

ருத்தலும், வாதத்தை விட்டுப் பிறிதொன்றனைச் சொல்லிப்பொழுது போக்கலும், சுபக்கத்துக்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுடம்பட்டுப் பரபக்கத்துக்குக் குற்றம் பேசுதலும், தோல்வித்தான மெய்தியோனைத் தோல்வித்தான மெய்தினை யென்றறிந்து கூறாதிருத்தலும், தோல்வித்தான மெய்தாதானை எய்தினாய் என்று கூறுதலும், தன் சித்தாந்தத்திற் கிணங்காதவற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ் சாதித்தலுமென இவை. இங்ஙனம் நான்கும் இருபத்தொன்றும் பதினெட்டும் இருபத்திரண்டுமாகிய அறுபத்தைந்தும் அனுமான அளவைக்குக் குற்றங்களாம்.

இவை குற்றமாகலின் ஆகம அளவைக்கு முன்னாக வையாது இறுதிக்கண் வைத்தார். இவற்றிற் குதாரணம் உய்த்துணர்ந்து கொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும். இன்னும் இப்பக்க ஏது வுவமைகளை எடுத்துச் சொல்லும்வழிப் படுஞ் சொற்குற்றங்களெல்லாந் தோல்வித் தானத்துளடங்கும். ஈண்டுக் கூறும் பக்கப்போலி உவமைப் போலிகளெல்லாம் ஏதுப்போலியுள் அடங்குமெனத் தார்க்கிகர் கூறுவர். பக்கவுவமைகளின் இலக்கணத்தை நோக்கிக் காணும்வழி, அவை பக்கப்போலி யுவமைப் போலியெனப் படுவனவன்றி ஏதுப்போலியெனப்படாமையறிக. இதனானே அனுமானப் பிரயோகத்தின்கட் படுங் குற்றங்கள் இவையென்பது தெரித்துக் கூறப்பட்டது. கச

---

## பிரமாணவியல்—முதற் சூத்திரம்

இங்ஙனம் அளவை யிலக்கணங் கூறிய வாசிரியர், அவ்வளவை யானுணரப்படும் முப்பொருள்களை துண்மை மூன்று சூத்திரத்தானுணர்த்துவான் தொடங்கி, முதற் சூத்திரத்துப் பதியுண்மைக்கு அளவை கூறுகின்றார் :

ஒருவனோ டொருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலகமெல்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே　[லாம்
தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறு மாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே.　உக



(உரை) அவன் அவள் அது என்னும் அவயவப் பகுப்புடைய பிரபஞ்சந் தோன்றுதற்குரிய சற்காரிய முறையாற்றோன்றி நின்று அழிதலுடைமையால், அது தன்னைத் தோற்றுவிப்பானொரு வினைமுதலை அவாய் நிற்கும்; ஆகலான், அவ்வுலகம் ஒடுங்குதற்கு ஏதுவாய் நின்ற சங்கார காரணனே அஃதொடுங்கிய பின்னும் அநாதிமுத்த சித்துருவாய் நிலைபெற்று நின்று அநாதிபெத்த சித்துருவின் பொருட்டு மீளவும் அவ்வுலகத்தை முன்போல மருவுவிக்கும்; அதனால் அவனே யுலகிற்கு முதற் கடவுள்.

*"கொள்ளப்படாது மறப்பதறிவிலென் கூற்றுக்களே" என்பதனுட் கொள்ளப்படா தென்பதுபோல, போவதென்னும் ஒருமை அத்தொழின்மேல் நின்றது. உம்மை இறந்தது தழீஇயிற்று. ஒருவனையென்னு மிரண்டாவதும் தானேயென்னும் பிரிநிலை ஏகாரமும் விகாரத்தாற் றொக்கன. ஈறு ஆகுபெயர். உம்மை சிறப்பு. ஆகி என்பது பெயர். மருவுவித்தல் முன்போலவே தோன்றச் செய்தல். †"குடிபொன்றிக் - குற்றமு மாங்கே தரும்" என்றாற்போல வில்விகுதி விகாரத்தாற் றொக்கது. முழுவதும் ஒடுங்கிய பின் முதல்வன் எவ்வாறு நிற்பனென்னுங் கடாவை விடுத்தற்கு அநாதிமுத்த சித்துருவாய் மன்னிநின்று என்றார். ஆக்கச்சொல் வருவித்துரைக்க. அநாதிமுத்த சித்துருவென இனம்பற்றி யடையடுத்தலின், அநாதிபெத்த சித்துருவும் உண்டென்பதூஉம், மீளவும் மருவுவித்தல் அதன் பொருட்டென்பதூஉம் பெற்றாம். ‡"மலத்துளதாம்" என்றார் முதனூலாசிரியரும். ஒருவனோ டொருத்தி யொன்றென் றுரைத்தலாகிய அடைமொழி, வந்துநின்று போதலாகிய ஏதுவைச் சாதிக்குங் குறிப்பேதுவாய் நின்றது. இது மூன்றெழுவாயும் மூன்று பயனிலையும் உடைத்தாய் முதனூன் முதற் சூத்திரம்போல முக்கூற்றதாமாறு காண்க. இனி அம்மூன்றனுள் முதற் கூற்றை இருபத்தேழு செய்யுளான் வலியுறுத்துவான் தொடங்கினார். க

உதிப்பதும் ஈறுமுண்டென் றுரைப்பதிங் கென்னை முன்னோர்
மதித்துல கநாதி யாக மன்னிய தென்ப ரென்னின்

---

* திருக்கோவையார் - அஎ.　† திருக்குறள் - கஎக.
‡ சிவஞானபோதம் - சூத் - க.

இதற்கியான் அனுமா னாதி யெடேனிப்பூ தாதி யெல்லாம்
விதிப்படி தோற்றி மாயக் காணலான் மேதி னிக்கே. ௨௨

(உரை) உலோகாயத நூலுணர்ந்தோர் காட்சியளவைக் கெய்தாதன பிரமாணமாகாவென மதித்து உலகம் நித்தமென்பாராகலான் நிலைத்தொழி லொன்றேயன்றி ஏனையிரண்டு தொழில்களதுண்மை பெறப்படாதெனின்,—ஈண்டு நீ விதித்த விதியாகிய நிலைத்தொழில் போலவே ஏனையிரண்டு தொழிலும் உடன்நிகழக் காண்டலான், இதனைச் சாதித்தற்கு நீ கொண்ட காட்சியளவையொன்றே அமையுமாகலின், ஈண்டு வேறு பிரமாணங்களெடுத்துக் காட்டல் வேண்டாம்.

படி உவமவுருபு. "தோற்றமுமீறு முள்ளதன்பாலே கிடத்தலின்*" என்றார் முதனூலாசிரியரும். மேதினிக்கென்பது உருபுமயக்கம். இதனானே உலோகாயதன் மதம்பற்றி நிகழும் ஆசங்கையைப் பரிகரித்து முத்தொழிலுண்மை சாதிக்கப்பட்டது. பரபக்கத்துட் சித்தாந்தப் பார்வையாற் பரபக்கத்தாரை மறுத்தார்; ஈண்டுப் பரபக்கப் பார்வையால் அவர் கூறும் மறுப்பைப் பரிகரித்துச் சித்தாந்தத்தை காட்டுகின்றார். இவை தம்முள் வேற்றுமையாகலிற் கூறியது கூறலன்மை யுணர்க. வேதாந்தநூ லிரண்டாமத்தியாயத்துள் இரண்டாம் பாதத்தினும் முதற்பாதத்தினுங் கூறியனவு மிவ்வாறே கொள்ளப்படும். ௨

இயல்புகாண் தோற்றி மாய்கை என்றிடின் இயல்பி
னுக்குச், செயலதின் றியல்பு செய்தி செய்தியேல் இயல்ப
தின்றாம், இயல்பதாம் பூதந் தானே இயற்றிடுஞ் செய்தி
யென்னில், செயல்செய்வான் ஒருவன் வேண்டுஞ் செயற்
படும் அசேத னத்தால். ௨௩

(உரை) அத்தோற்றக்கேடுகள் உலகிற்கியல்பாகலின் அவற்றிற்கு வினைமுதல் வேண்டப்படுவதன்றெனில்,—தோன்றலுங் கெடுதலும் விகாரமாகலின் விகாரமாதலியல்பிற்குக் கூடாது. அங்ஙனம் விகாரமாதலே உலகிற் கியல்பெனின்,—அவ்வாறியம்புவார்க்கு விகாரத்தின் வேறாய் இயல்பென்பதொன்றில்லை யெனப்படும்; படவே தோற்றி மாய்கைஇயல்பென்பது விட்டுப்போய்த்தோல்வித்தானமாய் முடியும்.

* சிவஞானபோதம் - சூத் - க. அதி - க.



இனி இயல்பும் விகாரமும் வேறெனவே கொண்டு,பூதநான்கும் இயல்பாயுள்ளன அவை தோற்றிமாய்தலாகிய விகாரத்தைச்செய்யுமெனின்,—நன்றுசொன்னாய்; அவை அங்ஙனந் தொழிலுற்று நிற்குஞ்செயப்படு பொருளாகலிற் செய்ப்படுபொருட்கு வினைமுதல் வேறு வேண்டப்படும்.

படுமென்பது செய்யுமென்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம். அசேதனமென்பது செயப்படுபொருளென்னுந் துணையாய் நின்றது. சாத்தன் தன்னைக் குத்தினானென்புழியும், குத்தியது கையுங் குத்தப்பட்டது பிறிதோர் உறுப்புமாகலின், வினைமுதலுஞ் செயப்படு பொருளுமொன்றாதல் யாண்டும் இன்மையுணர்க. ௫

நிலம்புனல் அனல்கால் காண நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும்
பலந்தரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டா வென்னின்
இலங்கிய தோற்ற நிற்றல் ஈறிவை இசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசம் தனக்கிலா நாதன் வேண்டும். ௨௪

(உரை) நான்கு பூதங்களுள், வாயு ஏனை மூன்று பூதங்களையும் நிலைபெறுத்தித் தான் அவற்றது சமுகத்தினிலைபெறும்; அங்கி ஏனை மூன்று பூதங்களையுமழித்துத் தான் அவற்றது சமுகத்தினழிவெய்தும்; அப்பு ஏனை மூன்று பூதங்களையுந் தோற்றித் தான் அவற்றது சமுகத்திற்றோன்றும்; பிருதிவி ஏனை மூன்று பூதங்களினின்று நுகரப்படும் பயனைப் பயப்பித்துத் தானும் அவற்றது சமுகத்திற் பயன்படுதலை யுடைத்தாம். இங்ஙனஞ் செயப்படுபொருட்கு வினைமுதல் வேறாய் நின்று காரிய நிகழ்த்துதல் கண்கூடாக நிகழ்தலின் இவையே தம்முள் ஒன்றனையொன்று பண்ணவமையும், வேறொருவன் ஈண்டைக்கு வினைமுதலாதன் மிகையாமெனின்,—அற்றன்று; இந்நான்கு பூதங்களுமொப்ப முத்தொழிற்படுதலான் இவை ஒன்றனைக் காரியப்படுத்துமாற்றல் உடையனவன்மையின், இவைபோல முத்தொழிற்படுதலின்றி மேம்பாடுடையானொருவனே இவற்றைத் தொழிற்படுத்தற்பொருட்டு வேண்டப்படும்.

எதிர்நிரனிறையாக வைத்துரைக்க. இவ்வாறன்றி மேலைச் செய்யுளின் பொருளே பொருளாகக்கொண்டு, கூறியது கூறலென்னும் வழூப்பட வுரைப்பாருமுளர். நலங்கிளர் நாதனென இயையும். நலம் - மேம்பாடு. இவையிரண்டு செய்யுளானும், உலகம் முத்தொழி

லுடைத்தென்பதனை யுடம்பட்டுத் தருபவனொருவன் வேண்டாவென்னும் உலோகாயதரிலொருசாரார் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரிக்கப்பட்டது. ௪

சார்பினில் தோன்று மெல்லாம் தருபவன் இல்லை யென்னில்
தேரின் இல் லதற்கோ தோற்றம் உள்ள தற் கோநீ செப்பாய்
ஓரின் இல் லதுவுந் தோன்றா துள்ளதேல் உதிக்க வேண்டா
சோர்விலா திரண்டு மின்றி நிற்பது தோன்று மன்றே. ௨௫

(உரை) கணபங்கமாகிய எல்லாப் பொருள்களுள்ளும் முற்கணத்திற்றோன்றிய பொருள் பிற்கணத்திற்றோன்றும் பொருட்குச்சார்பாய் மேம்படுதலின், எல்லாப்பொருளும் வித்தின்கேட்டின் அங்குரம்போல அவ்வச்சார்பிலே தோன்றுமெனச் சவுத்திராந்திகர் முதலியோர் மதம்பற்றிக் கூறவமையும், இதற்கொரு கருத்தாத் தோற்றநாசமின்மைபற்றி மேம்பாடுடையனாயுளனாதல் வேண்டாவெனின்,—அற்றன்று: நீ சார்பில்தோற்றங் கூறியது இல்பொருட்கோ உள்பொருட்கோ? இல்பொருட்காயின், அது முயற்கோடுபோல ஒருஞான்றுந் தோன்றுமாறில்லை. அற்றேற் குடம்போல உள்பொருட்குந் தோற்றம் வேண்டாமையின் மாத்திமிகர் மதம்பற்றி இல்லதுமன்றியுள்ளதுமன்றி அநிர்வசனமாய் நிற்பதொருபொருள் தோன்றுமெனக் கோடும்.

இல்லதுவும் என்னும் உம்மை சிறப்பு. உடம்படுமெய்பெறுதல் இலேசாற் கொள்க. ௫

உள்ளது மிலது மின்றி நின்றதொன் றுளதே லுண்டாம்
இல்லதே லில்லை யாகும் தோற்றமும் இசையா தாகும்
உள்ளகா ரணத்தி லுண்டாம் காரிய முதிக்கும் மண்ணில்
இல்லதாம் படங்க டாதி எழில்தரு மியற்று வானால். ௨௬

(உரை) அங்ஙனம் அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருள்தானொன்று உண்டோ இல்லையோவெனக் கடாயினார்க்கு, உண்டெனில் உள்பொருளேயாம் இன்றெனி லில்பொருளேயாமெனப்பட்டு அநிர்வசனமென்றது போலியாயொழியும்; அல்லதூஉம் அநிர்வசனப் பொருள் சூனியமாகலின் அதற்குத் தோற்றமுங் கூடாது; இவ்வாறு சவுத்திராந்திகர் முதலியோர் கூறும் இல்பொருட்கும் மாத்திமிகர் முதலியோர் கூறும் அநிர்வசனப்பொருட்குந் தோற்றங் கூடாமையின், பாரிசேடவள்வையாற் காரணங் காரியமிரண்டும் உள்பொருளேயாய்க் காரணத்தினின்றுங் காரியம் ஒரு கருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்றுமென்பது, குயவனாவான் திகிரிமுதலிய துணைக்காரணங்களை மண்ணாகிய முதற்காரணத்தின்கண் உய்ப்ப, அதனினின்றும் ஆடைமுதலிய காரியந் தோன்றாது குடஞ் சால் கரகமுதலிய காரியமே வெளிப்பட்டுத் தோன்றுதலின், அவ்வெதிர்மறை முகத்தானும் உடம்பாட்டு முகத்தானும் அறியப்படும்.



உள்ளது மிலதுமின்றி நின்றதொன்றுளதே லென்றது அநுவாதஞ் செய்து கொண்டது. ௬

ஒருபொரு ளொருவ னின்றி உளதில தாகு மென்னில்
தருபொரு ளுண்டேலின்றாம் தன்மையின் றின்றே லுண்டாய்
வருதலின் றிலது கார்ய முதலுள தாகு மென்னில்
கருதுகா ரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தா வாலாம்.

(உரை) அற்றேல், அவையிரண்டும் ஏலாமையிற் காரியப்படுவதோர் பொருள் உண்டுமாய் இல்லையுமாய் நிற்கும் ஈரியல்புடையதாகலின், இதற்கொரு கருத்தா வேண்டப் படுவானல்லனெனச் சமணர் மதம்பற்றிக் கோடுமெனின்,—அற்றன்று; உண்டும் இல்லையுமாமென மாறுபட்ட இரண்டு தன்மை ஒருபொருட் கிசைதல் கூடாது. இனிக் காரணரூபமாயுண்டு காரிய ரூபமாயில்லை யென்பதே உண்டும் இல்லையு மென்றதற்குப் பொருளெனின்,—நன்று சொன்னாய்; காரண காரியங்கட்குத் தம்முள் வேற்றுமை யின்மையிற்காரணம் உள்பொருளாகவே காரியமும் அதன்கட் சூக்கும ரூபமாயுள்ளதாய் அது பின்னர்த் தூலரூபமாய் விளங்கித் தோன்றுதல் ஒரு வினைமுதலானு மென்பது தானே போதரும்.

இன்னுமிச் சற்காரிய வாதத்தின்கட்படுங் கடாவிடைகளெல்லாம் "தந்து முதல்காரகம்" என்னும் *ஞானமிர்த முதலியவற்றுட் காண்க. இவை மூன்றுசெய்யுளானும் முறையே, இல்லது தோன்றுமென்னுஞ் சவுத்திராந்திகர் முதலியோர் மதமும், இல்லது முள்ளதுமல்லது தோன்று மென்னும் மாத்திமிகர் முதலியோர் மதமும்,

* ஞானமிர்தம் - ௨௨.

இல்லது முள்ளதுமாயது தோன்றுமென்னுஞ் சமணர் மதமும் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, வருமுறை யென்பதனாற் பெறப்பட்ட சற்காரியவாதத்தை வலியுறுத்தி, தருபவனொருவன் வேண்டுமென்பது சாதிக்கப்பட்டது. இதுகாறும் வந்து நின்று போவதென்றதூஉம், வருமுறை யென்றதூஉம், தருபவனொருவன் வேண்டுமென்றதூஉம், வைதிகப்புறத்தார் மதத்தான் இகந்துபடாமைக் காத்தார்; இனி வைதிகத்துட்பட்ட மீமாஞ்சகர் தார்க்கிகர் சாங்கியர் மதத்தான் முறையே அவை யிகந்துபடாமற் காக்கின்றார்.

காயத்தின் அழிவு தோற்றம் கண்டனம் உலகிற் காணா
நீஇத்தை உரைத்த வாறிங் கென்னெனில் நிகழ்த்து முண்மை
மாயத்த உலகம் பூநீர் தீவளி வான மாதி
பாயித்தா னொன்றி னொன்று தோன்றிநின் றழித லாலே. எ

(உரை) காயமும் உலகு மென்னும் இருகூற்றுப் பிரபஞ்சத்துள், ஆண் பெண் அலியென மேற்கூறிய அவயவப் பகுப்புக் காயத்திற்கேயன்றி ஏனையுலகத்திற் கின்மையால், அவயவப் பகுப்புடைமை பற்றித் துணியப்படுந் தோற்றக் கேடுகளுங் காயத்திற்கேயன்றி உலகிற்கில்லை யென்பது துணியப்படுவதாயிருக்கத் தோற்றக் கேடுகள் இரண்டற்கும் ஒப்பக் கூறுதல் அமையாதென்று நீ சொல்லில்,- அற்றன்று; இவ்வாறுனக்கு மயக்கத்தைச் செய்வதாகிய வுலகமும் நிரவயவமாகலின்றி, நில நீர் தீ வளி வான மென்றற்றொடக்கத்துப் பகுப்புடைத்தாகிய இதனான், அவ்வுண்மையே நீ கூறும் இருகூற்றுப் பிரபஞ்சத்து ளொன்றாகிய வுலகமும் ஏனைக்காயம்போலத் தோன்றி நின்றழிதலை உணர்த்தும்.

ஆயவென்னும் பெயரெச்சத்துளகரமும், இதனானென்பதனுள் அன்சாரியையும், விகாரத்தாற்றொக்கன; *"பெற்றத்தாற் பெற்றபயன்" என்றாற்போல. ஆயிற்றானென்று பாடம் ஓதுவாருமுளர். ஒன்றினென்னும் இன் உவமவுருபு. †"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் - மெய்யுருபு தொகா விறுதியான" என்பதோத்தாகலின், இரண்டாவது இறுதிக்கட்டொக்கது. ஆல் அசை. ஒன்றினொன்று தோன்றி நின்றழிதலால் என்பதற்கு வான முதலிய ஐந்

* திருக்குறள் - ருஉச.

† தொல்காப்பியம் - சொல் - வேற்றுமை மயங்கியல் - உஉ.



தும் முறையே ஒன்றினொன்று தோன்றிநின்றழியு மென்னுஞ் சுருதி உனக்குப் பிரமாணமாதலாலென் றுரைப்பாருமுளர். வேதத்துள் விதிவாக்கியம் ஒழித்து ஒழிந்தன வெல்லாம் புனைந்துரை வகையானன்றிப் பிரமாண மாகாவெனக் கொண்ட மீமாஞ்சக மதத்தார்க்கு அவ்வுபநிடதச்சுருதி பிரமாணமன்றென்பது அவரறிந்திலர். அல்லதூஉம் ஈண்டுக் கூறுவன வெல்லாம் பொருந்துமாறுபற்றி யன்றி ஆகமவளவை பற்றி யன்மையானும் அவ்வுரை போலியாதலறிக. அ

ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் ஒக்கப்
பாரிடம் அழிவ தின்றாம் என்றிடிற் பயில்வித் தெல்லாம்
காரிட மதனிற் காட்டும் அங்குரங் கழியும் வேனில்
சீருடைத் துலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

(உரை) நிலம் மலை கடல் முதலிய வடிவிற்றாகிய வுலகமுங் காயம் போல அவயவப் பகுப்புடைமையான் அதுபோலத் தோன்றி நின்றழிதல் பெறப்படுமென்ற தொக்கும்; அங்ஙனமாயினும், பார்த்தறியப்படும் உலகமெல்லாம் ஒருங்கேயழியுமெனின், உலகம் அநாதியென்னுஞ் சுருதியொடு முரணுதலானும், மீளத் தோன்றுதற் கோரியை பின்றாய் முடியுமாகலானும் அவ்வாறன்றி உலகத்தொரு பக்கம் அழியினும் ஒரு பக்கம் நிற்குமென்றலே பொருத்தமுடைத்தெனின்;— அற்றன்று; தம்முளொரு சாதிப் பலபொருளாகிய வித்து முதலிய சடங்கள் ஒவ்வொரு காலவிசேடத்தின் ஒருங்கே தோன்றுதலும் ஒருங்கே யழிதலுங் கண்டாமாகலின் அவ்வியல்பிற்றாகிய வுலகமும் அவ்வக்காலம் வந்துழி, அவ்வாறு முழுவதுமொருங்கே தோன்றி ஒருங்கே யழியும்.

பாரிடம் வினைத்தொகை. சீர் உவமவுருபு, அச்சீரொன்றாற் போல. ௯

காலமே கடவுளாகக் கண்டனம் தொழிலுக் கென்னில்
காலமோ அறிவின் றாகும் ஆயினுங் காரி யங்கள்
காலமே தரவே காண்டும் காரணன் விதியினுக்குக்
காலமுங் கடவு ளேவ லால்துணைக் கார ணங்காண். ௰

(உரை) காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து சேறலான் அத்தோற்றக் கேடுகட்குக் காலமே கருத்தாவாய் முடியுமெனின்,—அஃதொக்கும்;

அங்ஙனமாயினும் அது சடமாகலாற் கருத்தாவாகாது சேதனனாகிய கருத்தாவினது ஏவலான் அவன் செய்யும் அத்தொழிற்குத் துணைக் காரணமாம் என்றறிவாயாக.

இது சொற்பொருட்பின் வருநிலை. ஓகாரஞ் சிறப்பின்கண் வந்தது. காலமேதரவேயென்னும் ஏகாரமிரண்டினுள், முன்னையது பிரிநிலைக் கண்ணும், பின்னையது தேற்றத்தின்கண்ணும் வந்தன. இவை மூன்று செய்யுளானும் மீமாஞ்சகர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, வந்து நின்றுபோவது சாதிக்கப்பட்டது. ௧௦

அழிந்தபின் அணுக்கள் தாமே அகிலமாய் வந்து நின்று
கழிந்திடுங் கன்மத் தென்னில் கன்மமும் அணுவுங் கூட
மொழிந்திடுஞ் சடமே யாகி மொழிதலான் முடியா செய்தி
ஒழிந்திடும் அணுரூ பங்கள் உலகெலா மொடுங்கு மன்றே.

(உரை) உலகம் அழிந்தபின்னர் மீளப்பரமாணுக்கள்தாமே கன்மமேதுவாகப் பிரபஞ்சமாய்த் தோன்றிநின்றழியும் கன்மங் காலங்கள்போல் இறைவனிச்சையும் ஒரு காரணமாம் அத்தனையே பிறிதில்லையெனின்,-அற்றன்று; கன்மமும் அணுவுஞ் சடமேயாகலான், அவை தம்முட்கூடித் தொழிற்படுதல் சித்தாகிய முதல்வன்தொழிலையின்றி அமையாது. அதுவன்றியும்,உலகம்ஒடுங்கும்போது அணுவுங் கூடவேயொடுங்குமாதலால், அது பின் அகிலமாய்வந்து கழியுமாறு யாண்டையது.

இவ்வணுகாரணவாதஞ் சவுத்திராந்திகர் வைபாடிகர் ஆசீவகர்க்கும் ஒக்குமேனுந் தலைமைபற்றித் தார்க்கிகர்மேல் வைத்து மறுத்தவாறு. ௧௧

காரண அணுக்கள் கெட்டாற் காரிய உலகின் றென்னில்
காரண மாயை யாகக் காரியங் காண லாகும்
காரண மாயை யென்னை காண்பதிங் கணுவே யென்னில்
காரண மாயை யேகாண் காரியம் அணுவிற் கண்டால். ௩௨

(உரை) சத்திரூப சமூகமாய் நிலைபேறுடைய மாயையே உலகிற்கு முதற்காரணமாதலால் அணுக்கள்அழிந்தமைபற்றி உலகு மீளக் காரியப்படுதற்கோரிழுக்கில்லையெனவும், அணுக்கள் காரியப்பொருளாகலால் அவை யுலகிற்கு முதற்காரணமாதல் செல்லாதெனவும் உணர்க.



இது சொற்பொருட்பின்வருநிலை. காண்டலால்என்பது கண்டெனத் திரிந்தது. *"மயலாகு மற்றும் பெயர்த்து" என்றாற்போல. ஆல் அசை. ௧௨

காரிய மென்ப தென்னை காரண அணுவை யென்னில்
காரியம் அவய வத்தாற் கண்டனங் கடாதி போலக்
காரிய உருவ மெல்லாம் அழிதருங் கார ணத்தால்
காரிய உறுப்பின் மாயை தருமெனக் கருதி டாயே. ௩௩

(உரை) அணு காரியப்பொருளாய் அழிதன்மாலைத் தென்பதூஉம் மாயை காரியப்பொருளாதலின்றி நிலைபேறுடைய தென்பதூஉம், முறையே அவயவமுடைமையானும் அஃதின்மையானும் யப்படும்.

இதுவுஞ் சொற்பொருட்பின்வருநிலை. அணுக்களுக்கு அவயவமுண்டென்பது சையோகப்படுதலாற் பெறப்படும். ௧௩

தோற்றமும் நிலையு மீறும் மாயையின் தொழில தன்றே
சாற்றிடு முலகம் வித்துச் சாகாதி அணுக்க ளாக
ஏற்றதே லீண்டு நிற்கும் இல்லதே லியைவ தின்றாம்
மாற்றநீ மறந்தா யித்தால் மாயையை மதித்தி டாயே. ௩௪

(உரை) மாயைதருமென்றதற்கு, மாயையே பிரகிருதியென்றறிக என்னும் †வேதமொழியும், வித்துச்சாகாதி முதலியவற்றின் வைத்து உடம்பாட்டானும் எதிர்மறையானும் வழங்குகின்ற உலகமொழியும், சான்றாதலின் இதனானும் அணுகாரணவாதத்தை விட்டு மாயையே காரணம் என்பதனை அறிவாயாக.

பிரமாணங் கூறி வலியுறுத்தியவாறு, வேதத்தின்தொழில் அதனையுணர்ந்தார்மேலேற்றிக் கூறப்பட்டது. ஏனையவற்றைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இத்தால் என்புழி விகாரத்தாற்றொக்கவும்மை, காரியவுறுப்பின்மை மாத்திரையேயன்றியென இறந்ததுதழீஇயிற்று. ௧௪

மாயையி னுள்ள வஞ்சம் வருவது போவ தாகும்
நீயதிங் கில்லை யென்னில் நிகழ்த்திடு முயலிற் கோடு

* திருக்குறள் ௩௪௪. † சுவேதாசுவதரம் - ௪ - ௧௦.

போய்உகும் இலைக ளெல்லாம் மரங்களிற் புக்குப் போதின்
ஆயிடும் அதுவு மென்னிற் காரணங் கிடக்க வாமே. ௧௪

(உரை) அதுவன்றியுஞ் சற்காரியகாரணங் கொள்ளாது இல்லது உற்பத்தியாம் என்பார்க்கு முயலின்கண்ணுங் கோடுளதாதல் வேண்டும்; அற்றேல் உள்ள பிரபஞ்சமே மாயையின்ஒடுங்கி மீளத் தோன்று மென்பார்க்கும், அவ்வாறே மரத்தினின்று உதிர்ந்த இலை தானே மரத்தின்ஒடுங்கி மீளத் தோன்றுதல் வேண்டுமெனின்,-அஃதொக்கும்; அங்ஙனம் உதிர்ந்த இலைகள் சத்திரூபகாரணமாய் நிலைபேறுடைமையின் அது மீளத் தோன்றுதற்குரிய பிறகாரணங்களெல்லாம் அதனோடொருங்கு கூடியவழி அவ்வாறே தோன்றும், அல்லுழித் தோன்றாதாகலின் அதுபற்றிக் கடாவென்னை.

தருக்கங் கூறி வலியுறுத்தியவாறு. பிரவஞ்சம் வஞ்சமெனக் குறைந்து நின்றது. பிறகாரணங்களாவன: கன்மங் காலம்முதலாயின. கிடத்தல் முதற்காரணத்தோடு ஒருங்கியைதல். கிடக்கவாமென்பது மழைபெய்யக் குளநிறையுமென்றாற்போல நின்றது. அதுவே தோன்றுதற்குரிய காரணவியைபு இல்வழியும் மரத்தின்கண் அதுபோல மற்றுஞ் சத்திகள் பலவுளவாகலின், இயைபுடைய வேறுவேறிலைகள் தோன்றுதற் கிழுக்கின்மையும் உணர்க. ௧௫

கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ள தாகி
வருதலால் அநாதி வைய மற்றொரு கடவு ளித்தைத்
தருதலால் ஆதி யாகச் சாற்றலு மாகு மாயைக்
கொருவனு மென்னிங் கென்னின்உள்ளவா றுரைப்பக்கேள்நீ.

(உரை) அற்றேல் இங்ஙனஞ் சற்காரியவாதங் கூறுவார்க்கு உலகம் அழிபொருளென்றல் பொருந்தாதாய் முடியுமெனின்,—அற்றன்று; காரணங்காரியமிரண்டும் உள்பொருளேயென்பது மேற்கூறியவாற்றான் இனிது விளங்குதலிற் காரியப்பிரபஞ்சமும் நித்தப்பொருளேயாம். ஒரு கருத்தாவால் ஒரு காலத்து விளங்குதலும் ஒரு காலத்து மறைதலுமாகிய அவத்தை வேறுபாடுபற்றி அழிபொருளென்றுஞ் சாற்றப்படும். அவ்வவத்தை வேறுபாடு கருதாதவழி உம்மையால் நித்தப்பொரு[illegible]

187183

சிவமயம்

# மதிப்புரைகள்

**சித்த மார்க்கம்** - ஆசிரியர் : திரு. வி. கலியாணசுந்தர முதலியார்; 70 பக்கம்; விலை அணா 6. கிடைக்குமிடம்: முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை. இச் சிறுநூல், இவ்வாசிரியர் சென்ற ஆண்டில் நமது சமாஜ மகா நாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரையாகும். இதன்கண் சைவ சமயத்தின் சமரசம், சித்தர் நிலை, சித்தர்கள் கண்ட உண்மை, சித்தாந்த சமயம் சித்தர்கள் கண்ட முடிபுகளைக் கொண்டுள்ளமை, நமது சமாஜம் செய்தற்குரிய பணிகள் முதலிய பல அரும்பொருள்கள் மனதைக் கவரக்கூடிய சிறந்த நடையில் எழுதப்பட்டுள்ளன. இச்சிறு நூலைப் படிப்பதால் இளைஞர்கட்கு நம் சமயத்தில் ஒரு புதிய ஊக்கம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு சைவ இளைஞர் கையிலும் இந்நூல் இருத்தற்குரியது.

**தம்பிரான் தோழர் தவவாழ்க்கை** - ஆசிரியர் : துடிசைக்கிழார்-அ. சிதம்பரனார்; பக்கம் 20; விலை அணா 4. கிடைக்குமிடம்: தம்பிரான் தோழர் தமிழ்ச்சங்கம், திருவாரூர். இச்சங்கத்தின் வெளியீடாகிய இந்நூலில், பல சைவ நூல்களை இயற்றிய இவ்வாசிரியர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்க்கை, கேவலம் காமத்தின்பாற்பட்ட வாழ்க்கையன்றென்பதையும், அவர் சிறந்த தவவாழ்க்கை நடத்தியவரென்பதையும், அவர் சகமார்க்கத்தை விளக்கவந்த சமயகுரவர் என்பதையும், சிறப்பாக அம்மார்க்கத்தையும் பொதுவாக ஏனைய மூன்று மார்க்கங்களையும் அவர் வாழ்க்கையின் பகுதிகளிற் காணலாம் என்பதையும், வேறு பல அரிய பொருள்களையும் தெளிவாகப் பல மேற்கோள்களுடன் விளக்கியுள்ளார். இந்நூலைச் சைவர் அனைவரும் வாங்கி இச்சங்கத்துக்கு உதவி புரிதல்வேண்டும்.

**திருவருணை யமக அந்தாதி** - முதற்பாகம் - ஆசிரியர் : கவிராஜ பண்டிதர் திம்மப்ப அந்தணனார் - விலை அணா ஒன்று. சேலம் முனிசிபல் காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய இவ்வாசிரியர் சித்திரப் பாடல்களைப் பாடுவதில் விருப்பமும் திறமையுமுடையவரென்பதை இதற்கு முன் இவர் வெளியிட்ட நூல்களைப் பற்றிய மதிப்புரைகளில் நாம் தெரிவித்துள்ளோம். இந்நூலுள் 33 பாடல்களில் அந்தாதித் தொடையில் யமகம்வைத்து இவ்வாசிரியர் அருணையின் சிறைப்பையும் அண்ணாமலையான் சிறப்பையும் புகழ்ந்துள்ளார். இவ்வருமையான நூல் தமிழ் மாணவர்கள் பயிலுதற்குரியது. பாடல்கள் நல்லநடையிலுள்ளன.

உ

சிவமயம்

வெளி வருகின்றது ! வெளி வருகின்றது !!

# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில்விருத்தம், வேல் விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப் பெயரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக்குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று 1108 பக்கங்கொண்ட ஒரே நூலாக முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணாமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் (29-12-35 ஞாயிற்றுக்கிழமை) முதல்நாட் காலையில் அருணகிரிநாதர்க்கு அருள் புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்படும்.

தனிப்பிரதி விலை ரூபா 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12

நான்கு பிரதிகள் விலை ரூபா 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா $2\frac{1}{2}$

உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-ஏ, கல்லுக்காரத் தெரு
மயிலாப்பூர், சென்னை
10-12-1935

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.